
திருச்சிற்றம்பலம்



பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்


அருள்மிகு கற்பக விநாயகர்

உ

திருச்சிற்றம்பலம்

பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்

*

வெளியீடு
டாக்டர் வெ.தெ. மாணிக்கம்
ஏஜ-141, அண்ணாநகர்,
சென்னை - 600 040.

பலன்தரும் திருமுறைப் பதிகங்கள்

பாராயணம் செய்யும் முறை

காலையில் எழுந்து ஸ்நானம் செய்து பூஜை அறை அல்லது சுவாமி படங்கள் வைத்திருக்கும் இடத்திற்குச் சென்று உட்கார்ந்து முதலில் விநாயகப் பெருமானை வேண்டி சங்கல்பம் செய்துகொண்டு பிறகு சமயாச்சாரியர்கள் நால்வரை வணங்கி பின் அந்தந்த பலன்களுக்கு ஏற்றவாறு உள்ள பதிகத்தைப் பாராயணம் செய்ய வேண்டும். 1 வாரம் / 15 நாள் / 1 மாதம் / ஒரு மண்டலம் தினமும் காலை, மாலை நேரங்களில் பாராயணம் செய்ய வேண்டும். முழு நம்பிக்கையுடனும், பக்தி சிரத்தையுடனும், பாராயணம் செய்தால் நிச்சயம் பலன் கிடைக்கும். முதலில் நமப்பார்வதிபதயே! ஹர ஹர மகாதேவா! என்று சொல்லி,

விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடிபோற்று கின்றேனே.

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக்கல் மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழி திருநாவலூர் வன்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி

பிறகு "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லி பதிகத்தைத் தொடங்கவும், முடிவிலும் "திருச்சிற்றம்பலம்" என்று சொல்லவும்.

1/3

உ

திருச்சிற்றம்பலம்

பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

பலன் தரும் திருமுறைப் பதிகங்கள்

1/3

முன்னுரை

இறைவன்

வாழ்த்துப் பொருளாக மட்டுமின்றி வாழ்வுப் பொருளாகவும் இறைவனைக் கொண்டவர் தமிழர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே ஐவகை நிலத்துக்கும் அடிப்படையாக அமைந்த கருப்பொருள்களுள் முதற்பொருளாகத் தெய்வத்தைக் குறித்தனர்.

வழிபாடு இன்றியமையாதது

"அரிதரிது மானிடர் ஆதல் அரிது" என்றாங்கு ஏனை உயிர்களை விட மனிதராகப் பிறப்பது மேலானது. உடம்புக்கு உணவுபோல் உயிருக்கு வழிபாடு தேவை. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிழ்சிரிப்பும் கொண்ட இனித்தமுடைய எடுத்தபொற்பாதத்தினை வழிபடுவதே மனிதப்பிறவி எடுத்ததன் பயன் என்பர் அப்பர் பெருமான். அவ்வாலறிவனுடைய நற்றாளை நாளும் தொழுவதே கற்ற கல்விக்குப்பெருமை என்பது வள்ளுவர் துணிபு.

எவ்வாறு வழிபடுவது ?

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறையவர் தாம்விரும்பும் உண்மை ஆவது பூசனை".

என்றபடி, இறைவன் அன்பர்களிடம் வழிபாட்டையே விரும்புகிறார். எத்தகைய வழிபாடு ? எம்மொழியில் வணங்குவது ? ஆலம் உண்ட நீலகண்டரே ஆலாலசுந்தரருக்குப் பதிலிறுத்துள்ளார்.

"அற்சனை பாட்டே ஆகும் ஆதலால் மண்மேல் நம்மைச்
சொற்றமிழ்பாடு கென்றார் தூமறை பாடும் வாயார்"

என்றும் வாடாத தமிழ்ப் பாமாலை கொண்டு வழிபட்டு உய்வதே தமிழர் கடன்.

வழிபாட்டின் பயன்

வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவதில் வல்லவன் இறைவன் ஒருவனே. 'வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட' என வழிபாட்டின் பயனைத் திருமுருகாற்றுப்படை பேசுகிறது.

மனத்தூய்மை, சொற்றூய்மை, செயல்தூய்மை என வழிபட்டால் தூயவாழ்வு அமைவதைக்கண்டே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனச்சுருங்க உணர்த்தினாள் ஔவை மூதாட்டி.

தமிழ் மக்களால், சைவ சமயக் கருவூலங்களாகப் போற்றப் பெற்று வருபவை நமது பன்னிரு திருமுறைகள். திருக்கோயில்களில் வழிபாட்டு நேரங்களில் பன்னிரு திருமுறை ஓதுதல் பல நூற்றாண்டுகளாகப் பழக்கத்தில் இருந்து வருகின்றது. நித்திய வழிபாடுகளிலும் ஆன்மார்த்த பூஜை நிறைவிலும் திருமுறைகளைப் பாராயணம் செய்தல் சைவ மரபாக உள்ளது. திருமுறைகளை முறையாக ஓதி சிவனருளால் இட்ட சித்திகளை எய்தியோர் மிகப்பலர். தேவாரப் பதிகங்கள் சிலவற்றுள் அவற்றை ஓதுவாரால் எய்தும் பலன்கள் குறிக்கப்பெற்றுள்ளதை பலரும் அறிவர்.

திருமுறைப் பனுவல்கள் விடந்தீண்டி இறந்தாரை எழுப்புதல், எலும்பைப் பெண்ணாக்குதல், முதலைவாய்ப் பாலனை மீட்டல், சூலை, வெப்பு நோய்களை நீக்குதல், செங்கல்லைப் பொன்னாக்குதல் முதலிய பல அற்புதங்களைச் செய்ய வல்லன என்பதைப் பெரிய புராணம் முதலிய நூல்கள் நன்கு எடுத்தியம்புகின்றன. இவை புனை கதைகள் அன்று உண்மையே என்பதைப் பல நூறுபேர் தத்தம் அனுபவ வாயிலாகவும் அறிந்துள்ளனர்.

விரும்பி ஓதுவர் வேண்டும் பலன்களைத் தரும் நமது சைவத் திருமுறைகளைப் பல்லாண்டுக் காலம் அன்புடன் ஓதி மனமார வழிப்பட்டு, அகந்தைக் கிழங்கை அகற்றி, உள்ளத்தில் உண்மையொளி உண்டாக்கி வாழ்வில் எல்லா நலனும் வளமும் பெற்று யாவரும் வாழ்ந்திட எம்பெருமான் திருவருளை வேண்டுகிறேன்.

இத்திருப்பதிகங்களை அனைவரும் வாயாரப்பாடி, மனமா வழிபட்டு, அகந்தை கிழங்கைக் அகற்றி, உள்ளத்தில் உண்மை ஒளிஉண்டாக்கி வாழ்வில் எல்லா நலனும், வளமும் பெற்று நெடிதினிது வாழ இறைவனை இறைஞ்சுகிறேன்.

அன்புடன்,

டாக்டர் **வெ.தெ.மாணிக்கம்,** எம்.ஏ., பிஎச். டி.,
AI–141, அண்ணாநகர், சென்னை–40.

1. உயிருக்கு உறுதியும் மன நிம்மதியும் பெற

நமசிவாயப் பஞ்சாக்கர பதிகம் திருநாவுக்கரசர் அருளியது. திருநாவுக்கரசரை சமணர்கள் பலவிதக் கொடுமைகள் செய்து கடைசியில் பெரிய கல்லுடன் அவரைக் கட்டி நடுசமுத்திரத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடுகிறார்கள். ஈசனருளால், பஞ்சாக்கரத்தின் மகிமையால், திருநாவுக்கரசர் கட்டு அவிழ்ந்து, கல்லும் தெப்பமாகி மிதந்து அவர் "கரையேறிய குப்பம்" என்ற இடத்தில் கரை ஏறுகிறார். இந்த இடம் கடலூருக்கு அருகில் உள்ளது. அவர் அவ்வமயம் பாடியருளிய திருப்பதிகம்தான் இந்த பஞ்சாக்கரப் பதிகம்.

4–ஆம் திருமுறை

திருநாவுக்கரசர் அருளியது — பண் : காந்தாரபஞ்சமம்
ராகம் : கேதாரகௌளம்

திருச்சிற்றம்பலம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக்கை தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சிவாயவே. 1

பூவினுக்கு கருங்கலம் பொங்க தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே. 2

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றுமில்லையாம்

பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்றறுப்பது நமச்சிவாயவே. 3

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்துயாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோமல்லோம்
அடுக்கற்கீழ்க் கிடக்கினு மருளின் நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே. 4

வெந்த நீறருங்கலம் விரதிகட் கெலாம்
அந்தணர்க் கருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக் கருங்கலம் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சிவாயவே. 5

சலமிலன் சங்கரன் சார்ந்தவர்களால்
நலமிலன் நாடொறும் நல்குவான் நலம்
குலமில் ராகிலும் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே. 6

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே. 7

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே. 8

முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரணாதல் திண்ணமே
அன்னெறியே சென்றங் கடைந்தவர்க் கெல்லாம்
நன்னெறியாவது நமச்சிவாயவே. 9

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாய பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே. 10

2. உயிர்க்கு உறுதியும் மன நிம்மதியும் பெற

3–ம் திருமுறை

திருஞானசம்பந்தர் அருளியது பண் : காந்தாரபஞ்சமம்
ராகம் : (கேதாரகௌளம்)

திருச்சிற்றம்பலம்

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே. 1

மந்திரம் நர்ன்மறைஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே. 2

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழிதிறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே. 3

நல்லவர் தீயர் எனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுக்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே. 4

கொங்கு அலர் மன்மதன் வாளி ஐந்து அகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கு அரவின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே. 5

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே. 6

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே. 7

வண்டு அமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே. 8

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஒணாச்
சீர்வணச் சேவடி செவ்விநாள் தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செழுத்துமே. 9

புத்தர் சமண் கழுக்கையர் பொய் கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறு அணிவார் வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே. 10

நற்றமிழ் ஞான சம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலை ஈரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே. 11

3. மன நிம்மதி அடைய

பஞ்சாக்கரப் பதிகம் திருஞானசம்பந்தர் அருளியது.

மயிலாப்பூரில் அங்கம்பூம்பாவையை எழுப்பிய பிறகு திருவான்மியூர் முதலிய தலங்களில் வழிபட்டு சீர்காழியை அடைகிறார். அவருக்கு அப்போது திருமணத்திற்குத் தக்க பருவம் வந்தமையால், அவரது தந்தையாரும் மற்றும் பலரும், நம்பாண்டார் நம்பிகளின் திருமகளைத் திருமணம் பேசி, நிச்சயித்து, திருநல்லூர்ப்பெருமணம் (தற்போது ஆச்சாள்புரம் என வழங்கி வருகிறது) என்ற தலத்தில் திருமணம் சிறப்பாக நடந்தது. அவ்வமயம், மனைவியாரின் கைகளைப் பிடித்துக் கொண்டு, திருஞானசம்பந்தர் அங்குள்ளார் அனைவரையும் அழைத்துக் கொண்டு, "கல்லூர்ப் பெருமணம்" என்ற பதிகத்தைப் பாடி கோயிலுக்குள் நுழைந்தவுடன், ஈசன் அருளால் கர்ப்பக்கிரகத்தில் ஒரு ஜோதி தோன்றியது. அப்பொழுது "காதலாகிக் கசிந்து" என்ற நமசிவாயப் பஞ்சாக்கரப் பதிகத்தைப் பாடிக் கொண்டே எல்லோரையும் அந்தச் சோதியில் இரண்டறக் கலக்கச்செய்தார். இதுதான் திருஞானசம்பந்தர் பாடியருளிய கடைசிப் பதிகம்.

3–ஆம் திருமுறை

திருஞானசம்பந்தர் அருளியது — பண் : கௌசிகம்
ராகம் : பைரவி

திருச்சிற்றம்பலம்

காதல் ஆகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே. 1

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண் மலர்வார் மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எலாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே. 2

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே. 3

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்து ஓத வல்லார்தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே. 4

கொல்வார் ஏனும் குணம் பல நன்மைகள்
இல்லார் ஏனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே 5

மந்தரம் அன்ன பாவங்கள் மேவிய
பந்தனை யவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே. 6

நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய்வாயினர் ஆயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே. 7

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால் விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே. 8

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதம் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பதரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே. 9

கஞ்சி மண்டையர் கையில்உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சிவாயவே. 10

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞானசம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்தபாசம் அறுக்க வல்லார்களே. 11

4. மன நிம்மதி அடைய

பஞ்சாக்கரத் திருப்பதிகம் சுந்தரர் அருளியது. கொங்கு நாட்டில் காவிரித் தென்கரையிலுள்ள "திருபாண்டிக் கொடுமுடி" என்ற தலத்தை சுந்தரர் அடைந்து ஈஸ்வரனை வணங்கி திருஐந்தெழுத்தை அமைத்துப் பாடிய திருப்பதிகம் இது. ஒவ்வொரு பாடல் முடிவிலும் "சொல்லும்நா நமச்சிவாயவே" என்று அமைத்துப் பாடியருளியதால் இப்பதிகம் "நமச்சிவாய" திருப்பதிகம் என வழங்கலாயிற்று

சுந்தரர் அருளியது

பண் : பழம் பஞ்சுரம்
ராகம் : சங்கராபரணம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே
மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத
தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற்
பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே. 1

இட்டன்னும்மடி ஏத்துவார் இகழ்ந்திட்ட
நாள் மறந்திட்ட நாள்
கெட்ட நாளிவை யென்றலால் கருதேன்
கிளர்புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடி தொழுதேத்து
பாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே. 2

ஓவுநாளுணர்வு அழியும் நாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்

காவுநாளிவை என்றலால் கருதேன்
    கிளர்புனற் காவிரிப்

பாவு தண்புனல் வந்திழி பரஞ்சோதி
    பாண்டிக் கொடுமுடி

நாவலாவுனை நான் மறக்கினும்
    சொல்லும்நா நமச்சிவாயவே. 3

எல்லையில் புகழ் எம்பிரானெந்தை
    தம்பிரானென் பொன் மாமணி,

கல்லைஉந்தி வளம் பொழிந்திழி
    காவிரியதன் வாய்க்கரை

நல்லவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற்
    பாண்டிக் கொடுமுடி

வல்லவாவுனை நான் மறக்கினுஞ்
    சொல்லும்நா நமச்சிவாயவே. 4

அஞ்சினார்க்கு அரண் ஆதியென்றடி
    யேனும் நான்மிக அஞ்சினேன்

அஞ்சலென்றடித் தொண்டனேற்கருள்
    நல்கினாய்க்கு அழிகின்றதென்

பஞ்சின் மெல்லடிப் பாவைமார் குடைந்தாடு
    பாண்டிக் கொடுமுடி

நஞ்சணிகண்ட நான் மறக்கினுஞ்
    சொல்லும்நா நமச்சிவாயவே. 5

ஏடுவான் இளந்திங்கள் சூடினை யென்பின்
    கொல்புலித் தோலின்மேல்

ஆடுபாம்பது அரைக்கசைத்த அழகனே
யந்தண் காவிரிப்

பாடுதண்புனல் வந்திழி பரஞ்சோதி
பாண்டிக் கொடுமுடி

சேடனேயுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே. 6

விரும்பிநின் மலர்ப்பாதமே நினைந்தேன்
வினைகளும் விண்டன

நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெழில்பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்

குரும்பைமென்முலைக் கோதைமார் குடைந்தாடு
பாண்டிக் கொடுமுடி

விரும்பனேயுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே. 7

செம்பொன் நேர்சடையாய் திரிபுரந்
தீயெழச் சிலை கோலினாய்

வம்புலாங் குழலாளைப் பாகம் அமர்ந்து
காவிரிக் கோட்டிடைக்

கொம்பின்மேற் குயில் கூவ மாமயிலாடு
பாண்டிக் கொடுமுடி

நம்பனேயுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே.

சாரணன்தந்தை எம்பிரானெந்தை
தம்பிரானென் பொன் மாமணியென்று

பேரெணாயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்

நாரணன் பிரமன் தொழுங்கறையூரிற்
பாண்டிக் கொடுமுடி

காரணாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லும்நா நமச்சிவாயவே. 9

கோணிய பிறை சூடியைக் கறையூரிற்
பாண்டிக் கொடுமுடி

பேணிய பெருமனைப் பிஞ்ஞகப்
பித்தனைப் பிறப்பில்லியைப்

பாணுலாவரி வண்டறைக் கொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை

நாணனைத் தொண்டனூரன் சொல்லிவை
சொல்லுவார்க்கில்லை துன்பமே. 10

5. மனநிம்மதியும் சாந்தமும் பெற

சிவபுராணம்–திருவாசகம்–மாணிக்கவாசகர் அருளியது. மாணிக்கவாசகர் பாடியருளிய திருவாசகம் தேனினும் இனியது என்று வள்ளலார் சொல்கிறார். "சிவபுராணம்" திருவாசகத்தில் முதல் பாடல். திருப்பெருந்துறையில் அருளியது. அங்கு அவருக்கு சிவனருள் கிட்டியவுடனே பாடிய அரும்பாடலாகும்.

8 ஆம் திருமுறை

திருப்பெருந்துறை — கலி வெண்பா
மாணிக்கவாசகர் அருளியது — ராகம் : மோகனம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வா அழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன்அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லரச ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கும் மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்

கலந்தஅன் பாகிக் கசிந்துள் உருகும்
நலத்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்

ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ என்றுஎன்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையிற் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

6. திருமணமாக

**"ஆண் பெண் இருபாலார்க்கும் திருமணம்
தடைப்பட்டிருந்தாலும் சீக்கிரமே நடைபெற"**

திருமருகல் என்ற தலத்தில் திருஞானசம்பந்தர் அருளியது. பல தலங்களை தரிசித்து வழிபட்டு திருஞான சம்பந்தர் திருமருகல் என்ற தலத்தை அடைகிறார். அங்கு அப்பொழுது ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறது. என்னவென்று வினவ அவள், "ஐயா என்னை மணந்துகொள்ள நிச்சயித்த இந்த வணிகனுடன் நான் இங்கு வந்தபோது" பாம்பு கடித்து இறந்து விட்டான். வேறு திக்கில்லையே என்று கதறி அழுதாள். விவரம் முழுவதையும் அவளிடம் கேட்டு "சடையாய் எனுமால்" என்ற திருப்பதிகத்தை ஈசன் முன் வேண்டிப் பாட அந்த வணிகன்

தூங்கி எழுந்தவன்போல் எழுந்து நிற்க, அந்தப் பெண்ணும், வணிகனும், திருஞானசம்பந்தரை வணங்கி எழ, அவர்கள் இருவருக்கும் அந்தத் தலத்திலேயே, திருமணம் செய்வித்து, ஆசி புரிகின்றார் திருஞானசம்பந்தப் பெருமான்.

2-ம் திருமுறை

திருமருகல் — பண் : இந்தளம்

திருஞானசம்பந்தர் அருளியது — ராகம் : நாதநாமகிரியை

திருச்சிற்றம்பலம்

சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உள் மெலிவே. 1

சிந்தா எனுமால் சிவனே எனுமால்
முந்தா எனுமால் முதல்வா எனுமால்
கொந்தார் குவளை குலவும் மருகல்
எந்தாய் தகுமோ இவள் ஏசறவே. 2

அறையார் சுழலும் அழல் வாயரவும்
பிறையார் சடையும் உடையாய் பெரிய
மறையார் மருகல் மகிழ்வாயிவளை
இறையார் வளைகொண் டெழில் வவ்வினையே. 3

ஒலிநீர் சடையில் கரந்தாயுலகம்
பலிநீர் திரிவாய் பழியில் புகழாய்
மலிநீர் மருகல் மகிழ்வாயிவளை
மெலிநீர் மையள் ஆக்கவும் வேண்டினையே. 4

துணிநீல வண்ணம் முகில் தோன்றியன்ன
மணிநீலகண்டம் உடையாய் மருகல்
கணிநீலவண்டார் குழலாள் இவள்தன்
அணிநீல ஒண்கண் அயர்வு ஆக்கினையே. 5

பலரும் பரவப்படுவாய் சடைமேல்
மலரும் பிறை ஒன்றுடையாய் மருகல்
புலரும் தனையும் துயிலாள் புடைபோந்து
அலரும் படுமோ அடியாள் இவளே. 6

வழுவாள் பெருமான் கழல் வாழ்கஎனா
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே. 7

இலங்கைக்கு இறைவன் விலங்கல் எடுப்பத்
துலங்க விரல் ஊன்றலும் தோன்றலனாய்
வலங்கொள் மதில்சூழ் மருகல் பெருமான்
அலங்கல் இவளை அலர் ஆக்கினையே. 8

எரியார் சடையும் அடியும் இருவர்
தெரியாததோர் தீத்திரளாய் ஆயவனே
மரியார் பிரியா மருகல் பெருமான்
அரியாள் இவளை அயர்வாக்கினையே. 9

அறிவில் சமணும் அலர் சாக்கியரும்
நெறி அல்லன செய்தனர் நின்று உழல்வார்
மறிஏந்து கையாய் மருகல் பெருமான்
நெறியார்குழலி நிறை நீக்கினையே. 10

வயன்ஞானம் வல்லார் மருகல் பெருமான்
உயர் ஞானம் உணர்ந்து அடிஉள்குதலால்
இயல்ஞான சம்பந்தன் பாடல் வல்லார்
வியன்ஞாலம் எல்லாம் விளங்கும் புகழே. 11

7. மண வாழ்த்து

"மண விழா தம்பதிகளை வாழ்த்த"

திருஞானசம்பந்தர் திருஆலவாய் என்ற மதுரை மாநகரில் தங்கியிருந்தபோது அவருடைய தந்தையார் சிவபாத இருதயர் அவரைக் காண வருகிறார். அவரைப் பார்த்தவுடன் சம்பந்தருக்கு தோணியப்பர் நினைவுவர, தான் ஞானப்பால் உண்டு சிவஞானம் பெற்று அம்மை அப்பன் தரிசனம் செய்ததை எண்ணி, "மண்ணில் நல்ல வண்ணம்" என்ற திருப்பதிகத்தை அருளினார்.

3–ஆம் திருமுறை

திருக்கழுமலம் — பண் : கொல்லி
திருஞானசம்பந்தர் அருளியது — ராகம் : நவரோஸ்

திருச்சிற்றம்பலம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே. 1

போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 2

தொண்டனை செய்தொழில் துயர் அறுத்துஉய்யலாம்
வண்டணைக்கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணையாக ஓர் பெருந்தகை இருந்ததே. 3

அயர்வுளோம் என்றநீ அசைவு ஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கயல்வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே. 4

அடைவிலோம் என்றுநீ அயர்வு ஒழி நெஞ்சமே
விடைஅமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடைஉயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 5

மற்றொருபற்றிலை நெஞ்சமே மறைபலக்
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப்பேரல் குல்திருந்திழை யவளொடும்
பெற்றெனை ஆளுடைப் பெருந்தகை இருந்ததே. 6

குறைவளை அதுமொழி குறைவுஒழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை அவளொடும்
கறைவளை பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே. 7

அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
சுருக்குவாள் அருள்செய்தான் கழுமல வளநகர்ப்
பெருக்கு நீர் அவளொடும் பெருந்தகை இருந்ததே. 8

நெடியவன் பிரமனும் நினைப்பரிதாய் அவர்
அடியொடு முடி அறியா அழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே. 9

தாருறு தட்டுடைச் சமணர் சாக்கியர்கள் தம்
ஆருறு சொல்களைந் தடியிணை அடைந்து உய்மின்
காருறு பொழில் வளர் கழுமல வளநகர்ப்
பேரறத்தா ளொடும் பெருந்தகை இருந்ததே. 10

கருந்தடம் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடம் கொங்கையோடு இருந்த எம்பிரான்தனை
அருந்தமிழ் ஞானசம்பந்தன் செந்தமிழ்
விரும்புவார் அவர்கள் போய் விண்ணுலகாள்வரே. 11

8. நன்மகப்பேறு பெற

**"நன்மகப்பேறு கிடைக்கவும்
நல்ல குழந்தை பெறவும்"**

திருஞானசம்பந்தர் அருளியது. திருவெண்காடு என்ற தலத்தில் வழிபட்டுப் பாடியருளியது. வரலாற்று மகத்துவம் பெற்றது. சைவ சமய சந்தானாசாரியர்களில் மிகச் சிறப்புடன் உதித்த மெய்கண்ட தேவரின் பிறப்புக்கே காரணம் படைத்த பதிகம். திருப்பெண்ணாகடத்தில் அச்சுதக் களப்பாளர் என்ற சிவபக்தர் வசித்து வந்தார். அவருக்குப் புத்திர சந்தானம் இல்லாமல், ஈசனை வேண்ட, அவரது ஆசாரியர் அருணந்தி சிவாச்சாரியார் சொல்படி திருமுறைகளில் கயிறு சாத்திப் பார்க்க, இந்த திருவெண்காட்டுப் பதிகத்தின் இரண்டாவது பாடலான

"பேயடையாப் பிரிவெய்தும்" என்ற பாடல் கிடைக்க அப் பாடலில் வெண்காட்டு "முக்குளநீர் தோய்வினையார் அவர் தம்மை தோயாவாம் தீவினையே" என்றும் "பிள்ளையினோடுள்ள நினைவாயினவே வரம் பெறுவர் ஐயுர வேண்டாம் ஒன்றும்" எனவும் சொல்லியிருப்பதால், அச்சுதகளப்பாளர் தம்பதிகள் திருவெண்காட்டை அடைந்து அங்குள்ள சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்னி தீர்த்தம் ஆகிய மூன்று குளங்களிலும் நீராடி, தினமும் கோயிலில் வழிபாடு செய்து வந்தார்கள். ஓர் இரவு எல்லாம் வல்ல இறையருளால் ஒரு கனவு கண்டனர். கனவில் இறைவன் தோன்றி "சைவ சமயத்தை நிலைபெறச் செய்யக்கூடிய ஒரு புதல்வனை அடைவாய்" என்று மொழிய, அதேமாதிரி, அவர்களுக்கு ஒரு சத்புத்திரன் பிறக்க, அவனுக்கு "மெய்கண்டார்" என, நாமம் சூட்டினார்கள். அவர் தான் சந்தானாசாரியர்களில் சிறப்பானவராக விளங்கி, சைவசித்தாந் தத்தை வாரி வழங்கியவர். இவ்வளவு மகிமை படைத்த திருப்பதிகம் இது.

2–ஆம் திருமுறை

திருவெண்காட்டு பதிகம் — பண் : சீகாமரம்

ராகம் : நாதநாமகிரியை

திருச்சிற்றம்பலம்

கண் காட்டும் நுதலானுங்,
கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும்,
பிறை காட்டும் சடையானும்

பண் காட்டும் இசையானும்,
   பயிர் காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும்
   விடை காட்டும் கொடியானே. 1

பேய் அடையா பிரிவு எய்தும்
   பிள்ளையினோடு உள்ள நினைவு
ஆயினவே வரம் பெறுவர்
   ஐயுற வேண்டா ஒன்றும்
வேயன தோள் உமைபங்கன்
   வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையார் அவர்தம்மைத்
   தோயாவாம் தீவினையே. 2

மண்ணொடுநீர், அனல்,
   காலோடு ஆகாயம் மதிஇரவி
எண்ணில் வரும் இயமானன்
   இகபரமும் எண் திசையும்
பெண்ணினொடு ஆண், பெருமையோடு
   சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபட வெண்காடு
   இடமா விரும்பினனே. 3

விடமுண்ட மிடற்று அண்ணல்
   வெண்காட்டிண் தண்புறவின்
மடல் விண்ட முடத்தாழை
   மலர்நிழலைக் குருகு என்று
தடமண்டு துறைக்கெண்டை
   தாமரையின்பூ மறையக்
கடல் விண்ட கதிர் முத்த
   நகை காட்டும் காட்சியதே. 4

வேலைமலி தண்கானல் வெண்
காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடு
நன் மறையவன்தன்
மேல்அடர், வெங்காலன், உயிர்
விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்று
அடர அஞ்சுவரே. 5

தண் மதியும் வெய்யரவும்
தாங்கினான் சடையினுடன்
ஒண் மதியநுதல் உமை ஓர்கூறு
உகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம்
பலஓத பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல்
வீற்றிருக்கும் வெண்காடே. 6

சக்கரம் மாற்கு ஈந்தானும்
சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும்
அடைந்த அயிராவதம் பணிய
மிக்கு அதனுக்கு அருள் சுரக்கும்
வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளம் நன்கு உடையானும்
முக்கண் உடை இறையவனே. 7

பண் மொய்த்த இன்மொழியாள்
பயம் எய்த மலை எடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து அன்று
அருள் செய்தான் உறைகோயில்

கண் மொய்த்த கருமஞ்ஞை
    நடமாடக் கடல் முழங்க
விண் மொய்த்த பொழில் வரிவண்டு
    இசை முரலும் வெண்காடே. 8

கள்ளார் செங்கமலத்தான் கடல்
    கிடந்தான் என இவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கு ஒடு உயர்ந்து
    ஆழ்ந்தும் உணர் வரியான்
வெள்ளானை தவம் செய்யும் மேதகு
    வெண் காட்டான் என்று
உள்ளாடி உருகாதார்
    உணர்வுடைமை உணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள்
    மிண்டுமொழி பொருள் என்னும்
பேதையர்கள் அவர், பிரிமின்,
    அறிவுடையீர் இது கேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்
    திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும் ஒருதீது
    இலர் என்று உணருமினே. 10

தண்பொழில் சூழ் சண்பையர்கோன்
    தமிழ் ஞானசம்பந்தன்
விண்பொலி வெண்பிறைச் சென்னி
    விகிர்தன் உறை வெண்காட்டைப்
பண்பொலி செந்தமிழ் மாலை
    பாடிய பத்து இவை வல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர் போய்
    வான் பொலியப் புகுவாரே. 11

9. சுகப் பிரசவம் ஆக

"அறுவைச் சிகிச்சையின்றி சுகப் பிரசவத்திற்கும், இரட்டைக் குழந்தை பிரசவச் சிக்கல் தீர்வதற்கும்"

திருஞானசம்பந்தர் திருமூக்கீச்சரம் (உறையூர்) முதலிய பல தலங்கள் சென்று தரிசித்து வழிபட்டு திருச்சிராப்பள்ளியை அடைந்து அங்கு "தாயுமானசுவாமி" எனப்படும் "மாத்ரூ பூதேஸ்வரர்" சந்நிதியில் வழிபட்டு பாடியருளியது இத் திருப்பதிகம்.

திருச்சிராப்பள்ளி காவிரி ஆற்றிற்கு தென்கரையிலுள்ள சிவத்தலம். சிறப்பான வரலாற்றை உடையது. திரிசிரன் என்ற மூன்று தலையுடைய அசுரன் பூசித்த தலமாகையால் இந்தப்பேர் இதற்கு வந்தது. சுமார் 500 அடி உயரத்தில் அமைந்துள்ள குன்றின்மேல் உள்ள கோயில். அதற்குமேல் சுமார் 200 அடி உயரத்தில் உச்சிப் பிள்ளையார் கோயில் உள்ளது.

காவிரி வடகரையிலுள்ள ஒரு கிராமத்தில் சிவநேயர் செல்வர்களாகிய ஒரு செட்டியார் குடும்பத்தில் வந்த பெண் ஒருவள், பிரசவ காலத்தில், பக்கத்தில் பெற்றோர்கள் உதவியின்றி இருக்கும் வேளையில் ஈஸ்வரனைத் தியானித்து காக்குமாறு வேண்ட இத்தலத்து ஈஸ்வரன் அப் பெண்மணியின் தாயார் போல் தக்க சமயத்தில் அங்குச் சென்று மருத்துவம் செய்து சுகப்பிரசவம் அருளினார். அதனால்தான் அந்த தலத்து ஈஸ்வரனுக்கு "தாயுமானார்" என்ற திருநாமம். அந்தப் பெண்ணின் உண்மை தாயாரும், தந்தையாரும் வந்தவுடன் நடந்ததைக் கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். தலத்து அம்பிகை பெயர் "மட்டுவார் குழலி" என்பது.

1–ம் திருமுறை

திருச்சிராப்பள்ளி — பண் : குறிஞ்சி

திருஞானசம்பந்தர் அருளியது — ராகம் : ஹரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூற வென்னுள்ளம் குளிருமே. 1

கைமக வேந்திக் கடுவனொடூடிக் கழைபாய் வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முக வேழத் தீருரி போர்த்த விகிர்தா நீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே. 2

மந்தம் மழவம் மழலை ததும்பவரை நீழல்
செந்தண் புனமுஞ் சுனையுஞ் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம்மடிகள் அடியார்க்கு அல்லலில்லையே. 3

துறைமல்கு சாரற் சுனை மல்க நீலத்திடை வைகிச்
சிறை மல்கு வண்டுந் தும்பியும் பாடுஞ் சிராப்பள்ளிக்
கறை மல்கு கண்டன் கனலெரியாடுங் கடவுளெம்
பிறை மல்கு சென்னியுடைய வனெங்கள் பெருமானே. 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைவரல்லாமையுரைப் பீர்காள்
நிலவரை நீலமுண்டதும் வெள்ளை நிறமாமே. 5

வெய்யதண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்ய பொன்சேருஞ் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையலொர் பாகம்மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வரரரிவர் செய்கை யறிவாரே 6

வேயுயர் சாரற் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர் கோயுற் சிராப்பள்ளிமேய செல்வனார்
பேயுயர் கொள்ளிகை விளக்காகப் பெருமானார்
தீயு கந்தாடறிருக்குறிப் பாயிற் றாகாதே 7

மலை மல்குதோளன் வலி கெடவூன்றி மலரோன்றன்
தலை கலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொல வலவேவலஞ் சொல வலகீதஞ் சொல்லுங்கால்
சிலவல போலுஞ் சிராப்பள்ளிச் சேளர் செய்கையே 8

அரப் பள்ளியானும் மலருறைவானு மறியாமைக்
கரப் புள்ளிநாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப் பள்ளிமேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப் புள்ளீரும்மையே திலர் கண்டாலிகழாரே 9

நானா துடை நீத்மோர்களுங் கஞ்சி நாட்காலை
ஊனாப் பகலுண்டோது வோர்களுரைக்குஞ்சொல்
பேணா துறுசீர் பெறுதுமென் பீரெம் பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே. 10

தேனயம்பாடுஞ் சிராப்பள்ளி யானைத்திரை சூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகு பாடலிவை வல்லார்
வான சம்பந்தத்தவரொடு மன்னி வாழ்வாரே. 11

10. சுகப் பிரசவம் ஆக

"இதுவும் சுகப்பிரசவத்திற்கே"

திருநாவுக்கரசர் திருச்சிராப்பள்ளிக்கு எழுந்தருளி தாயுமானாரை வழிபட்டு அருளியது இத்திருப்பதிகம். இதில் நான்கு பாடல்கள் கிடைத்துள்ளன.

5–ம் திருமுறை

திருச்சிராப்பள்ளி — பண் : திருக்குறுந்தொகை
திருநாவுக்கரசர் அருளியது — ராகம் : நாதநாமகிரியை

திருச்சிற்றம்பலம்

மட்டுவார் குழலாளொடு மால்விடை
இட்ட மாவுகந்தேறு மிறைவனார்
கட்டு நீத்தவர்க் கின்னருளே செயும்
சிட்டர் போலுஞ் சிராப்பள்ளிச் செல்வரே 1

அரியயன் தலை வெட்டி வட்டாடினார்
அரியயன் தொழுதேத்து மரும் பொருள்
பெரியவன் சிராப்பள்ளியைப் பேணுவார்
அரியயன் தொழுவங்கிருப் பார்களே 2

அரிச்சிராப் பகல் ஐவராலாட்டுண்டு
கரிச்சிராது நெஞ்சே யொன்று சொல்லக்கேள்
திரிச்சிராப்பள்ளி யென்றலுந் தீவினை
நரிச்சிராது நடக்கும் நடக்குமே 3

தாயுமா யெனக்கே தலை கண்ணுமாய்
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை
தேய நாதன் சிராப்பள்ளி மேவிய
நாயனாரென நம்வினை நாசமே. 4

11. சரியாக பேச்சுவர

"திக்குவாய், தடைப்பட்ட பேச்சு, மழலைச்சொல் மாறி நன்றாகப்பேச (ஊமையும் பேசும்)"

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தில் திருச்சாழல் எனப்படும் பதிகம். தில்லையில் அருளிய திருப்பதிகம். சிதம்பரத்தில் தங்கியிருந்தபோது, மாணிக்கவாசகர் ஊருக்கு வெளியே ஒரு குடில் அமைத்துக்கொண்டு அதில் தங்கியிருந்தார். ஈழநாட்டு அரசனும், பிறவிலேயே ஊமையாகப் பிறந்த அவன் மகளும், பௌத்த மதகுரு ஒருவரும் தில்லைக்கு வந்து தில்லைவாழ் அந்தணர்களுடன் சமயவாதம் செய்து தங்கள் மதமே மேலானது என்று நிரூபிக்க முயன்றனர். தில்லைநாதன் தீட்சிதர்கள் கனவில் தோன்றி "ஊருக்கு வெளியே தனிக்குடிலில் வசிக்கும் மாணிக்கவாசகரை அழைத்துவந்து அவர்களுடன் சமய வாதம் செய்யச் சொல்லுக" என்று பணிக்க, அவ்வாறே தீட்சிதர்கள் மாணிக்கவாசகரை அழைத்துவர, மாணிக்கவாசகரும் தில்லைநாதனைத் தொழுது வேண்டி, பிறகு அந்தப்பௌத்தகுரு, ஈழத்தரசன் முதலியவருடன் சமய வாதம் செய்ய ஆரம்பித்துப் பல தத்துவங்களையும், உண்மைகளையும், அவர்களுக்கு உணர்த்தி, இந்த "திருச்சாழல் பதிகத்தால் அந்த ஊமைப் பெண்ணைப் பேச வைக்கிறார். 20 பாடல்களில் ஒவ்வொரு பாடலிலும் முதல் இரண்டு வரிகளால் மாணிக்கவாசகர் கேள்வி கேட்க பின் இரண்டு வரிகளால் அந்த அரசிளங்குமரியே பதில் கூறுவதாக அமைந்தது இத் திருப்பதிகம். என்னே ஆச்சரியம்! பிறவியிலேயே ஊமையாய்ப் பிறந்த அந்த அரசகுமாரி பேச ஆரம்பித்து விட்டாள். பிறகு அந்த அரசனும் சைவத்தை மேற்கொண்டான்.

8-ம் திருமுறை

திருச் சாழல் ராகம் : மோகனம்
மாணிக்கவாசகர் அருளியது

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கு அரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு என்னை
ஈசன் அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. 1

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான்ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ. 3

அயனை அனங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கள் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கெனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கெனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்தங்கு
எச்சனுக்கு மிகைத்தலைமற்று அருளினன்காண் சாழலோ 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீழ் அண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தால் ஆங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

மலைமகளை ஒருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தால் அவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தால் அவன் சடையிற் பாய்ந்திலளேல் தரணி யெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ. 7

கோலால மாகிக் குரைகடல்வாய் அன்றுஎழுந்த
ஆலாலம் உண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலாலம் உண்டிலனேல் அன்றுஅயன்மால் உள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பால் உகந்துஆடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காணேடீ
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

தான் அந்த மில்லான் தனைஅடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத்து அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்குஓர் வான்பொருள்காண் சாழலோ. 10

நங்காய்இது என்னதவம் நரம்போடு எலும்புஅணிந்து
கங்காளம் தோள்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந் தரத்துஇருவர்
தம்காலம் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோல் உடைதலைஊண் காடுபதி
ஆனால் அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடும்காண் சாழலோ 13

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக்கு ஊட்டு ஆம்காண் சாழலோ. 14

கடகரியும் பரிமாவும் தேரும்உகந்து ஏறாதே
இடபம்உகந்து ஏறியவாறு எனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவைமூன்றும் தழல்எரித்த அந்நாளில்
இடபமாய்த் தாங்கினான் திருமாள்காண் சாழலோ. 15

நன்றாக நால்வர்க்கு நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங்கு அறம்உரைத்தான் காணேடி
அன்றாலின் கீழிருந்தங்கு அறம்உரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன்என்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாம்அறியா
எம்பெருமான் ஈசாஎன்று ஏத்தினகாண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன் தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்குஅன்று அருளியவாறு என்னேடி
நலமுடைய நாரணன்தன் நயனம்இடந்து அரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ. 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமான் உண்டசதிர் எனக்கு அறிய இயம்பேடீ
எம்பெருமான் ஏதுஉடுத்தங்கு ஏதுஅமுது செய்திடினும்
தன்பெருமை தான் அறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக்கு ஆலின்கீழ் அறம்முதலா நான்கனையும்
இருந்தவருக்கு அருளுமது எனக்குஅறிய இயம்பேடீ
அருந்தவருக்கு அறமுதல்நான்கு அன்றுஅருளிச் செய்திலனேல்
திருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

12. தீராத வயிற்றுவலி குணமடைய

திருநாவுக்கரசர் சமண சமயத்தில் சேரவே, அவரது தமக்கையார் திலகவதியார். திருவதிகை வீரட்டத்துக் கோயிலுள்ள ஈசனை பலவாறு வேண்டித் துதிக்க, ஈசனும் திருநாவுக்கரசருக்கு சூலை நோயை பற்றச் செய்து (அதாவது கொடுமையான வயிற்றுவலி) விடுகிறார். நோயின் கொடுமை சகிக்க முடியாமல் திருவதிகை வந்து தமக்கையாரை சந்தித்து நடந்த எல்லா விவரங்களையும் கூற, இருவருமாய் திருவதிகை வீரட்டானேசுவரர் கோயிலுக்குச் சென்று இறைஞ்ச அந்த கொடியநோய் உடனே குணமாகிறது. அவர் அப்பொழுது அருளிய பதிகம்தான் “கூற்றாயினவாறு” என்ற திருப்பதிகம். இவர் பாடியருளிய முதல்பாட்டு இதுவேயாகும்.

4–ம் திருமுறை

திருவதிகைவீரட்டானம் பண் : கொல்லி
திருநாவுக்கரசர் அருளியது. ராகம் : நவரோஸ்

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தன நானறியேன்
ஏற்றாயடிக்கே யிரவும் பகலும் பிரியாது
வணங்குவனெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றினகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடியேன திகைக்கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 1

நெஞ்சமுமக்கே யிடமாக வைத்தேன்
நினையாதொருபோது மிருந்தறியேன்
வஞ்சமிது வொப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணிகா மற்றுரந்து கரந்துமிடீர்
அஞ்சேலுமென்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 2

பணிந்தாரன பாவங்கள் பாற்றவல்லீர்
படுவெண்டலை யிற்பலி கொண்டுழல்வீர்
துணிந்தே யுமக்காட்செய்து வாழலுற்றாற்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்

பிணிந்தார் பொடிகொண்டு மெய்பூசவல்லீர்
பெற்றமேற்றுகந்தீர் சுற்றும் வெண்டலைக் கொண்டு
அணிந்தீர் அடிகேளதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே. 3

முன்னம் அடியேனறியாமையினால்
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை யடியேனு மக்காளும் பட்டென்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னையடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கடனா வதுதான்
அன்ன நடையாரதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 4

காத்தாள்பவர் காவலி கழ்ந்தமையாற்
கரைநின்றவர் கண்டுகொளென்று சொல்லி
நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும்
வழித்துறை யொன்றறியேன்
வார்த்தையிது வொப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனலாரதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 5

சலம் பூவொடு தூபமறந்தறியேன்
தமிழோடிசைபாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலுமுன்னை மறந்தறியேன்
உன் நாமமென் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டுழல்வார்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்

அலந்தேனடியே னதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 6

உயர்ந்தேன் மனைவாழ்க்கையு மொண்பொருளும்
ஒருவர்தலை காவலிலாமையினால்
வயந்தே யுமக்காட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றினகம்படியே பறித்துப்
புறட்டி யறுத்தீர்த்திட நான்
அயர்ந்தேனடி யேன திகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 7

வலித்தென் மனைவாழ்க்கை மகிழ்ந்தடியேன்
வஞ்சம்மன மொன்றுமிலாமையினால்
சலித்தாலொருவர் துணையாருமில்லைச்
சங்கவெண் குழைக்காதுடை எம்பெருமான்
கலித்தேயென் வயிற்றினகம்படியே
கலக்கி மலக்கிட்டு கவர்ந்துதின்ன
அலுத்தேனடி யேனதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 8

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணியென்றிவற்றை
நணுகாமற்றுறந்து கரந்துமிடீர்
என்போலிகளும்மை யினித் தெளியார்
அடியார் படுவதிதுவேயாகில்
அன்பே யமையும் மதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 9

போர்த்தாயங் கொரானையி னீருரிதோல்
புறங்காடரங்கா நடமாடவல்லாய்
ஆர்த்தானரக்கன்றனை மால்வரைக்கிழ்
அடர்த்திட்டருள் செய்தவது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை யம்மானே. 10

13. உஷ்ண வியாதிகள் ஜுரம் நீங்க

"ஜுரம், உஷ்ணத்தால்வரும் வைசூரி, தலைவலி, வெப்பநோய் குணமடைய"

திருஞானசம்பந்தர் திருஆல வாயில் அருளியது. அரசன் கூன்பாண்டியனுக்கு பீடித்த வெப்ப நோயை முற்றிலும் குணப்படுத்தி பெருமை வாய்ந்த அற்புதத் திருப்பதிகம்.

சமணர்கள் பல முயற்சி செய்தும் மன்னன் குணமடையாமல், மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் மன்னனிடம் திருஞானசம்பந்தரைப் பற்றிச் சொல்ல, அந்த பெயரைக் கேட்டவுடனேயே அரசனுக்குச் சிறிது ஆனந்தம் வர, ஞானசம்பந்தரை அங்கு அழைத்து வருகிறார்கள். அவர் அரசன் அருகில் அமர்ந்து ஆலவாய்ச் சொக்கனை வணங்கி இந்த அற்புத திருநீற்றுப் பதிகத்தைப் பாடியருள, மன்னனின் வெப்பு நோய் அறவே நீங்கிற்று. அத்தகைய பெருமை வாய்ந்தது இந்தத் திருப்பதிகம்.

2–ம் திருமுறை

திருஞானசம்பந்தர் பண் : காந்தாரம் (நவரோஸ்)

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவா வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறுபெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
தருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தாலவாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணன் குந்திரு மேனி ஆலவாயான் திருநீறே. 8

மாலொா டயனறியாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பத் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமுங் கூட
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளா ரேத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே. 10

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்றிரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசமம்பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

14. குளிர் ஜுரம் நீங்க

**"குளிர் ஜுரம், வினையினால் ஏற்படும்
துன்பங்கள் நீங்க"**

திருஞானசம்பந்தர் அருளியது. திருஞானசம்பந்தர் திருப்பாச்சிலாச்சுராமத்தில் கொல்லி மழவனின் மகளை 'முயலகன்' என்ற நோயில் இருந்து காப்பாற்றிய பிறகு பல தலங்களுக்குச் சென்று தரிசித்து, வழிபட்டு, "திருக்கொடி மாடச் செங்குன்றூர்" என்ற ஊரை அடைகிறார். அவ்வமயம் அங்கு முன்பனிக்காலம். அந்த ஊர் மக்கள் பலருக்கும் சம்பந்தரின் சீடர்களில் சிலருக்கும் கடும் குளிருடன் கூடிய விஷஜுரம் பீடிக்கிறது. இதையறிந்த சம்பந்தர் இந்த "அவ் வினைக்கிவ்வினை" என்ற பதிகத்தைப் பாடியருள யாவரும் பூரண குணம் அடைகிறார்கள்.

1–ம் திருமுறை
திருநீலகண்டப் பதிகம்

பொது — பண் : வியாழக்குறிஞ்சி
திருஞானசம்பந்தர் அருளியது. — ராகம் : சவுராஷ்டிரம்

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினையாம் என்று
சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும்
உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான்
கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத்
தீண்டப்பெறா திருநீலகண்டம். 1

காவினை இட்டும் குளம்பல
தொட்டுங் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர்
என்று இருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி
போற்றுதும் நாம் அடியோம்
தீவினை வந்தெமைக்
தீண்டப்பெறா திருநீலகண்டம். 2

முலைத்தடம் மூழ்கிய போகங்களும்
மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெனை
ஆண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும்
மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை
தீண்டப்பெறா திருநீலகண்டம் 3

விண்ணுலகாள்கின்ற
விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும்
தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர்
உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை
தீண்டப்பெறா திருநீலகண்டம். 4

மற்று இணை இல்லா மலை திரண்டன்ன
திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும்
தன்மை கொல்லோ

சொற்றுணை வாழ்க்கை துறந்துஉம்
திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை
தீண்டப்பெறா திருநீலகண்டம். 5

மறக்கும் மனத்தினை மாற்றிஎம்
ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ்
பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடுவந்துமை
ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை
தீண்டப்பெறா திருநீலகண்டம். 67

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை
கடிந்தும் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை
ஏத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில்
அடர்த்து அருள் செய்தவரே
திருஇலித் தீவினை
தீண்டப்பெறா திருநீலகண்டம். 8

நாற்ற மலர்மிசை நான்முகன்
நாரணன் வாது செய்து
தோற்றமுடை அடியும் முடியும்
தொடர்வரியீர்
தோற்றினும் தோற்றும் தொழுது
வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை
தீண்டப்பெறா திருநீலகண்டம். 9

சாக்கியப் பட்டும் சமண் உருவாகி
உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும்
பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர்
அடிபோற்றுகின்றோம்
தீக்குழி தீவினை
தீண்டப்பெறா திருநீலகண்டம். 10

பிறந்த பிறவியில் பேணியெஞ்
செல்வன் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில்
இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன்
செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர்
கோனொடும் கூடுவரே. 11

15. வலது கண் பார்வை பெற

பல தலங்களை வழிபட்டு வணங்கி திருவாரூரை அடைந்து தியாகேசப் பெருமானை வணங்கி மிக வருந்தி இந்தப் பதிகத்தைப் பாடி வலக்கண் பார்வையையும் பெறுகிறார் சுந்தரர்.

7–ம் திருமுறை

திருவாரூர் — பண் : செந்துருத்தி
சுந்தரர் அருளியது — மத்தியமாவதி

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே
கனன்று முகத்தால் மிகவாடி

ஆளா யிருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீர் ஒற்றியல்லேன்
விரும்பி ஆட்பட்டேன்
குற்ற மொன்றுஞ் செய்த தில்லை
கொத்தை யாக்கினீர்
எற்றுக் கடிகேள் எண்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால்
வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டாது அடையுஞ்
சோலை ஆரு ரகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த
காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும்
அடியார் தங்கண் காணாது
குன்றின் முட்டிக் குழியில் வீழ்ந்தால்
வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர் பழனம்
பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவாரூரே உடையீர்
மனமே என வேண்டா
அருத்தி யுடைய அடியார்
தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால்
வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளம் திகழுஞ்
சோலை இதுவோ திருவாரூர்
எந்தம் அடிகள் இதுவே யாமாறு
உமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும்
அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ என்றால்
வாழ்ந்து போதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால்
நாரை சேருந் திருவாரூர்ப்
புனத்தார் கொன்றைப் பொன்போல்
மாலைப் புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம்
மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி அடியா ரிருந்தால்
வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை அடையுஞ்
சோலை ஆரு ரகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே
ஆமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி
மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்நீர் கொண்டால்
வாழ்ந்து போதீரே. 7

கழியாய்க் கடலாய்க் கலனாய்
நிலனாய்க் கலந்த சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோம்
உம்மை இகழா தேத்துவோம்

பழிதான் ஆவ தறியீ ரடிகேள்
பாடும் பத்தரோம்.
வழிதான் காணாது அலமந் திருந்தால்
வாழ்ந்து போதீரே. 8

பேயோ டேனும் பிரிவொன்று
இன்னா தென்பர் பிறரெல்லாங்
காய்தான் வேண்டிற் கனிதா
னன்றோ கருதிக் கொண்டக்கால்
நாய்தான் போல நடுவே திரிந்தும்
உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ்
சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே
இடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றுங் கிடந்தும் உம்மை
இகழா தேத்துவோம்
வருந்தி வந்தும் உமக்கொன் றுரைத்தால்
வாழ்ந்து போதீரே. 10

காரூர் கண்டத் தெண்தோள் முக்கண்
கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே
அடிப்பேர் ஆரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர்
நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர்
வாழ்ந்து போதீரே. 11

16. இடது கண் பார்வை பெற

"இடது கண் பார்வை பெற, கண் நோய், மங்கலான பார்வை சரியாக"

கயிலாயத்தில் ஆலால சுந்தரராக இருந்தபோது அங்கு சேடிமார்கள், அநிந்திதை, கமலினி என்பவர்கள்மீது மனம் செலுத்த, இதையறிந்த பரமேஸ்வரன், கமலினியை பரவையாராக திருவாரூரில் பிறக்கச்செய்து சுந்தரர் அவளை மணந்துகொள்ளச் செய்கிறார். அனிந்திதையை சங்கிலியாராக ஞாயிறு என்றுஊரில் பிறக்கச்செய்கிறார். ஞாயிறு கிழார் என்பவருக்கு மகளாகப் பிறந்த சங்கிலியாரை மணப்பருவம் வந்தபோது, திருவொற்றியூரில் ஒரு கன்னிமாடத்தில் கொண்டுபோய் விடுகிறார் அவளது தந்தை ஞாயிறு கிழார். தினமும் அங்கு அவள் கோவிலுக்குச் சென்று வழிபடுவாள். சுந்தரர் பனங்காட்டூர் திருமாற்பேறு, திருவல்லம், திருக்காளத்தி முதலிய திவ்ய தலங்களுக்குச் சென்று வழிபட்டு, திருவொற்றியூரை வந்தடைகிறார். கோயிலில் சுந்தரர் சங்கிலியாரைப் பார்க்க, அவள் மேல் ஆசைகொண்டு, அவளை மணக்க ஒற்றியூர் ஈசனை இறைஞ்ச, ஈசனும் "சங்கிலியாரின் கனவில் தோன்றி சுந்தரனை நீ மணஞ் செய்துகொள். ஆனால் அவரைச் சத்தியம் செய்து "உன்னைப் பிரியேன்" என்று உறுதி கூறச்செய்து பிறகு மணக்கவும்" என்று அருளினார். அவ்வாறே சங்கிலியார் சந்தரரைப் பார்த்து, "ஏற்கனவே தங்களுக்குப் பரவையர் என்ற மனைவி இருப்பதால் என்னைப் பிரியமாட்டேன் என்று கோவிலினுள்ளே ஈஸ்வரன் முன்னிலையில் சத்தியம் செய்து தந்தால் உங்களை நான் மணப்பேன்" என்று சொல்கிறாள். அன்று இரவு சுந்தரர் ஈசனை வேண்டி "அடியேன் சங்கிலி யாருக்குச் சத்தியம் செய்து

தரும்போது தயவு செய்து தாங்கள் கர்ப்பக்கிருகத்திலிருந்து விலகிப்போய் மகிழ மரத்தடிக்குச் செல்லவும்'' என்று வேண்ட, சுவாமியும் “அவ்வாறே ஆகுக'' என்று சொல்லி, அதே இரவில் மீண்டும் சங்கிலியார் வரும்போது, நான் மகிழமரத்தின் அடியில் இருப்பேன். ஆகவே நீ சுந்தரனிடம் ''சந்நிதியில் வேண்டாம், மகிழ மரத்தடியிலேயே சத்தியம் செய்து கொடுங்கள் என்று கேள்” என அருளினார். அவ்வாறே, மறுநாள் காலை சங்கிலியார் சுந்தரரிடம் வேண்ட ஈசன் திருவிளையாடலை அறியாது அவளுக்கு மகிழ மரத்தடியிலேயே சத்தியம் செய்து தந்து சங்கிலியாரை சுந்தரர் மணந்து கொள்கிறார். சில தினங்கள் சென்றன. சுந்தரருக்கு திருவாரூர் தியாசேகர் நினைவுவர, உடனே திருவொற்றியூரிலிருந்து சங்கிலியாரைப் பிரிந்துபோக எண்ணி, ஊர் எல்லையைத் தாண்ட, உடனே சத்தியத்தை மீறியதனால் எல்லையைத் தாண்ட, உடனே சத்தியத்தை மீறியதனால் அவருக்கு இரண்டு கண்கள் பார்வையும் போய்விடுகின்றது. ஈசன் செயலை வியந்து சுந்தரர் திருவெண்பாக்கம் எனும் தலத்தையடைந்து ஈசனை நினைத்து, “உள்ளே இருக்கிறீரா? இல்லையா?'' என்று வினவ, ஈசன் “உளோம்போகீர்'' என்று அருளி ஓர் ஊன்று கோலை அவருக்கு கொடுத்தருளினார். அதை ஊன்றிக்கொண்டு மெல்ல அடியவருடன் சென்று காஞ்சிபுரத்தை அடைகிறார் சுந்தரர். அங்கு கோயிலுக்குள் சென்று ஏகாம்பரநாதனையும், காமாட்சி யம்மையையும் வணங்கித் தொழுது வேண்ட, அம்பாள் அனுக்கிரகத்தினால் சக்தியின் பாகமாகிய இடது கண் பார்வையை பெறுகிறார். உடனே “ஆலந்தான் உகந்து'' என்ற திருப்பதிகம் பாடியருளினார் சுந்தரர்.

7–ஆம் திருமுறை

திருகச்சியேகம்பம் பண் : தக்கேசி
சுந்தரர் அருளியது (காம்போதி)

திருச்சிற்றம்பலம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிது முடையானைச்
சிந்திப்பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழலாளுமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 1

உற்றவர்குதவும் பெருமானை ஊர்வ
தொன்றுடையானும்பர் கோனை
பற்றினார்க் கென்றும் பற்றவன்றன்னை
பாவிப்பார் மனம் பாவிக்கொண்டானை
அற்றமில் புகழாளுமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 2

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
செங்கண்மால் விடைமேல் திகழ்வானைக்
கரியினீருரி போர்த்துகந் தானைக்
காமனைக் கனலா விழித்தானை

வரிகொள் வெள்வளை யாளுமை
  நங்கை மருவியேத்தி வழிபடப்பெற்ற
பெரிய கம்பனை யெங்கள் பிரானைக்
  காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 3

குண்ட லம்திகழ் காதுடை யானைக்
  கூற்று தைத்த கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
  வாளராமதி சேர் சடையானை
கெண்டையந்தடங் கண்ணுமை நங்கை
  கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம்மானைக்
  காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
  வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல்லானை
  அருமறையவை அங்கம் வல்லானை
எல்லையில் புகழாளுமை நங்கை
  யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
  காணக் கண்ணடியேன் பெற்றவாறே 5

திங்கள் தங்கிய சடையுடையானைத்
  தேவ தேவனைச் செழுங் கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடையானைச்
  சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
  மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் மானைக்
  காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 6

விண்ணவர் தொழுதேத்த நின்றானை
வேதம்தான் விரித்தோத வல்லானை
நண்ணினார்க் கென்றும் நல்லவன்றன்னை
நாளும் நாமுகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணு மூன்றுடைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்ற வாறே. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தையில் திகழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலோடு ஆனைஞ்சும் ஆட்டுகந்தானை
அந்தமில் புகழாளுமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே. 8

வரங்கள் பெற்றழல் வாளரக் கர்தம்
வாலியபுரம் மூன்றெரித்தானை
நிரம்பிய தக்கன்றன் பெரு வேள்வி
நிரந்தரஞ் செய்த நிட்கண்டகனைப்
பரந்த தொல்புகழாளுமை நங்கை
பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்க ளெட்டுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடியேன் பெற்ற வாறே. 9

எள்கலின்றி யிமையவர்கோனை ஈசனை
வழிபாடு செய்வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு

வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவி யோடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை யெங்கள் பிரானைக்
காணக் கண்ணடியேன் பெற்ற வாறே. 10

பெற்றம் ஏறுகந் தேறவல்லானைப் பெரிய
எம்பெருமானென் றெப்போதும்
கற்றவர் பரவப்படு வானைக்
காணக் கண்ணடியேன் பெற்ற தென்று
கொற்றவன் கம்பன் கூத்தனெம் மானைக்
குளிர் பொழிற்றிரு நாவலாரூரன்
நற்றமிழ்வை ஈரைந்தும் வல்லார்
நன்னெறி யுலகெய்துவர் தாமே. 11

17. முடக்கு வாதம், பிடிப்பு குணமாக

**"முடக்கு வாதம், பிடிப்பு, வலிப்பு, நரம்புகள்
பாதிப்பு ஆகியன குணமடைய"**

திருஞானசம்பந்தர் திருஅன்பிலாலந்துறை, திருமாந்துறை முதலிய திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டு திருப்பாச்சிலாச் சிராமம் என்ற தலத்தை அடைந்தார். இப்போது இந்தத் தலத்தை திருவாசி என்று சொல்கிறார்கள். அவ்வமயம் மழநாட்டைச் சேர்ந்த கொல்லி மழவன் எனும் அரசன் ஆட்சி புரிந்து வந்தான். அவனுடைய மகளுக்கு "முயலகன்" என்ற கொடு நோய் பிடித்து வாட்டியது. திருஞானசம்பந்தர் அங்குச் செல்ல அந்த அரசன் அவரை வணங்கி தனது மகளின் துன்பத்தைச் சொன்னான்.

உடனே ஞானசம்பந்தர் "துணிவளர் திங்கள்" என்ற இத்திருப்பதிகத்தைப் பாடி அந்நோய் முற்றிலும் குணமாகச் செய்தார். அன்று முதல் அந்த திருக்கோயிலில் நடராஜர் கீழ் இருந்த முயலகன் என்ற அசுரன் நீங்கி, ஒரு நாகமிருப்பதை இன்றும் காணலாம்

1–ம் திருமுறை

திருபாச்சிலாச்சிராமம் பண் : தக்கராகம்
திருஞானசம்பந்தர் அருளியது ராகம் : காம்போதி

திருச்சிற்றம்பலம்

துணிவளர் திங்கள் துளங்கி விளங்க
சுடர்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலமெலாம் செய்து
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
மணிவளர் கண்டரோமங் கையைவாட
மயல் செய்வதோ இவர் மாண்பே. 1

கலைபுனை மானுரி தோலுடையாடை
கனல் சுடரால் இவர்கண்கள்
தலையணி சென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் இவரென்ன
அலைபுனல் பூம்பொழில் சூழ்ந்தமர்
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
இலைபுனை வேலரோ வேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை
  வேண்டுவர் பூண்பது வெண்ணூல்
மஞ்சடை கண்டர் நெஞ்சிடமாக
  நண்ணுவர் நம்மை நயந்து
நஞ்சடை மாளிகை சூழ்தரு
  பாச்சிலாச்சிராமத்துறைகின்ற
செஞ்சுடர் வண்ணரோ பைந்தொடி வாடச்
  சிதைசெய்வதோ விவர்சீரே. 3

கனமலர்க் கொன்றை யலங்கலிலங்கக்
  கனறரு தூமதிக் கண்ணி
புனமலர் மாலை யணிந்தழகாய
  புநிதர்கொலா மிவரென்ன
வனமலி வண்பொழில் சூழ்தரு
  பாச்சிலாந் சிராமத்துறைகின்ற
மனமலி மைந்தரோ மங்கையைவாட
  மயல்செய்வதோ விவர்மாண்பே. 4

மாந்தர்தம் பானறுநெய் மகிழ்ந்தாடி
  வளர்சடை மேற்புனல் வைத்து
மோந்தைமுழாக் குழறாளமொர்வீணை
  முதிரவோர் வாய்முரிபாடி
ஆந்தைவிழிச் சிறுபூதத்தர்
  பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
சாந்தணி மார்பரோ தையலைவாடச் சதுர்
  செய்வதோ விவர்சார்வே. 5

நீறு மெய்பூசி நிறைசடைதாழ
  நெற்றிக்கண்ணா லுற்றுநோக்கி
ஆறதுசூடி ஆடர வாட்டி
  ஐவிரற்கோவண வாடை

பாறரு மேனியர் பூதத்தர்
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
ஏறது வேறிய ரேழையைவாட
இடர்செய்வதோ விவரீடே. 6

பொங்கிள நாகமோ ரேகவடத் தோடாமை
வெண்ணூல் புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர் கொலமிவரென்ன

அங்கிள மங்கையோர் பங்கினர்
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
சங்கொளி வண்ணரோ தாழ்குழல் வாடச்
சதுர் செய்வதோ விவர்சார்வே. 7

ஏவலத்தால் விசயற்கருள் செய்து
இராவணனை யீடழித்து
மூவரிலும் முதலாய் நடுவாய
மூர்த்தியையன்றி மொழியாள்
யாவர்களும் பரவும் மெழிற்
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
தேவர்கடவரோ சேயிழை வாடச்
சிதைசெய்வதோ விவர்சார்வே. 8

மேலது நான்முக னெய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலது வண்ணனுமெய்தியதில்லை
யெனவிவர் நின்றதுமல்லால்
ஆலது மாமதிதோய் பொழிற்
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
பாலது வண்ணரே பைந்தொடி வாடப்
பழிசெய்வதோ விவர்பண்பே. 9

நாணொடு கூடிய சாயினரேனு
நகுவரவர் இருபோதும்
ஊணொடு கூடியவுட்குந்தகையாலுரை
களவை கொளவேண்டா
ஆணொடு பெண்வடிவாயினர்
பாச்சிலாச் சிராமத்துறைகின்ற
பூணெடு மார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ விவர்பொற்பே. 10

அகமலியன் பொடு தொண்டர் வணங்க
வாச் சிராமத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர் கொலா மிவரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு
காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவையேத்த
சாரகிலா வினைதானே. 11

18. எலும்பு முறிவு குணமாக

**"எலும்பு முறிவிற்கும், படுகாயம்
அடைந்தவர்கள் விரைவில் குணமடையவும்"**

திருஞானசம்பந்தர் திருமாகறலில் அருளியது. ஞானசம்பந்தர் பல தலங்களைத் தரிசித்து, வழிபாடு செய்து திருவோத்தூர் என்னும் திருத்தலத்தில் ஆண் பனைமரத்தைப் பெண் பனையாக்கி, மற்றும் பல தலங்களைச் சென்று வழிபட்டபின் இந்த திருமாகறல் தலத்தை அடைந்தார். கோயில் உள்சென்று ஈசனை வணங்கி பாடியருளிய திருப்பதிகம் இது.

இந்தப் பதிகத்தில் ஒவ்வொரு பாடல் இறுதியிலும் முறையே, “தீவினைகள் தீருமுடனே”, “வினையகலுமிகவே”, “வினை பறையுமுடனே”, “நுங்கள் வினைதீர மிகவேத்த வழிபாடு நுகரா வெழுமினே”, “நாதனடியாரை நலியா வினைகளே”, “தொல்வினைகள் ஒல்கும்” “வினைகளகலுமிகவே”, “அடிகளடி யாரையடைபா வினைகளே”, “தொல்வினைகள் ஒல்குமுடனே” என்றெல்லாம் பாடியிருப்பதால், இப்பதிகத்தை முறையாகப் பாராயணம் செய்தால் நம் வினைகளெல்லாம் ஓடிப்போம் என்பதில் ஐயமில்லை.

3–ம் திருமுறை

திருமாகறல் — பண் : சாதாரி
திருஞானசம்பந்தர் — ராகம் : பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல் விளையாடலரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண் விடையண்ணலடி
சேர்பவர்கள் தீவினை கள்தீருமுடனே 1

கலையினொலி மங்கையர்கள்
பாடலொலி யாடல் கவின்எய்தியழகார்
மலையினிகர் மாடமுயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறலுளான்

இலையின்மலி வேனுனைய சூலம்
வலனேந்தி யெரி புன்சடையினுள்
அலைகொல் புனலேந்து பெருமானடியை
யேத்தவினை யகலுமிகவே. 2

காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
யாழ்முழவு காமருவுசீர்
மாலை வழிபாடு செய்து மாதவர்க ளேத்தி
மகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்
சுடர் நாகமசையா வழகிதாப்
பாலையான நீறுபுனை வானடியை
யேத்தவினை பறையுமுடனே. 3

இங்குகதிர் முத்தினொடு பொன்மணி
களுந்தியெழின் மெய்யுளுடனே
மங்கையரும் மைந்தர்களு மன்னுபுனலாடி
மகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றை குளிர்திங்களணி
செஞ்சடையினானடியையே
நுங்கள்வினை தீரமிக வேத்தி
வழிபாடு நுகராவெழுமினே, 4

துஞ்சுநறு நீலமிருணீங்க வொளி
தோன்று மதுவார் கழனிவாய்
மஞ்சுமலி பூம்பொழிலின் மயில்கள்
நடமாடமலி மாகறலுளான்
வஞ்சமத யானையுரி போர்த்து மகிழ்
வானொர் மழுவாளன் வளரும்
நஞ்சமிருள் கண்டமுடை நாதனடியாரை
நலியா வினைகளே. 5

மன்னுமறை யோர்களொடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யாலினி திறைஞ்சி
யிமையோரி லெழு மாகறலுளான்
மின்னைவிரி புன்சடையின் மேல்மலர்கள்
கங்கையொடு திங்களெனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்க
வுயர் வானுலகம் ஏறலெளிதே 6

வெய்யவினை நெறிகள் செல வந்தணையு
மேல் வினைகள் வீட்டலுறுவீர்
மைகொள்விரி கானல் மதுவார்கழனி
மாகறலுளானெழிலதார்
கையகரி கால்வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சி
யடையாவினைகள் அகலுமிகவே. 7

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வன பொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்க
ளோதமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி யீசனென ஏத்தவினை
நிற்றலில் போகுமுடனே. 8

தூயவிரி தாமரைக ணெய்தல்
கழுநீர்குவளை தோன்றமதுவுண்
பாயவரி வண்டு பலவண் முரலு
மோசை பயில்மாகறலுளான்

சாயவிர லூன்றிய விராவணன்
தன்மை கெடநின்ற பெருமான்
ஆயபுக ழேத்து மடியார்கள்
வினையாயினவு மகல்வதெளிதே. 9

காலினல பைங்கழல்க ணீன் முடியின்
மேலுணர்வு காமுறவினார்
மாலும் மலரானு மறியாமை
யெரியாகியுயர் மாகறலுளான்
நாலுமெரி தோலுமுரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும்விடை யூர்திவுடை யடிகளடி
யாரை யடையா வினைகளே. 10

கடைகொணெடு மாடமிக வோங்கு
கமழ்வீதி மலி காழியவர்கோன்
அடையும் வகையாற் பரவியரனை
யடிகூடு சம்பந்த னுரையால்
மடைகொள் புனலோடு வயல்கூடு
பொழில் மாகறலுளானடியையே
உடைய தமிழ் பத்துமுணர் வாரவர்கள்
தொல் வினைகளொல்கு முடனே. 11

19. விஷம் நீங்க

**“விஷ ஜந்துகளாகிய பாம்பு, தேள், பூரான்
கடித்த விஷம் இறங்க”**

திருநாவுக்கரசர் அருளியது. பல திருத்தலங்கள் சென்று வழிபட்டு, திருப்பழனம் சென்று வழிபட்டு பிறகு திங்களூர் எனும் தலத்திற்கு வருகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

அந்த ஊரில் அப்பூதி அடிகளார் என்ற ஓர் அந்தணர். நாவுக்கரசரது தெய்வீகத் தன்மையையும், பெருமைகளையும் கேள்வியுற்று அவரையே தனது மானசீக குருவாகக் கொண்டு அவருடைய இல்லத்தில் மகன் மகள், மற்றுமுள்ள பொருள்கள் அனைத்தினுக்கும் சுவாமிகள் பெயரையே சூட்டி, தண்ணீர் பந்தலுக்கும்கூட "திருநாவுக்கரசர் தண்ணீர் பந்தல்" என்று பெயர் வைத்தார். இதனைக் கேள்வியுற்ற நாவுக்கரசர் அவர் வீட்டிற்குச் சென்றார். நேரில் பார்க்காத அவரை இப்பொழுது நேரில் காணும் பாக்கியம் பெற்ற அப்பூதியார், சுவாமிகள் பாதங்களில் விழுந்து வணங்கி, வீட்டில் உள்ள எல்லோரையும் சுவாமிகளை வணங்கச் சொல்லி சுவாமிகளை அவர் இல்லத்தில் போஜனம் செய்யுமாறு வேண்டினார். மூத்த திருநாவுக்கரசு என்று பெயரிடப்பட்ட தனது மூத்த மகனை வாழை இலை அறுத்துவர தோட்டத்திற்கு அனுப்ப, அங்கு அவன் இலை நறுக்கும்போது ஒரு பாம்பு தீண்டி, இறப்பதற்குமுன் ஓடோடி வீட்டிற்குச் சென்று இலையைக் கொடுத்துவிட்டு நடந்ததைச் சொல்லி இறந்து விடுகிறான். அடியாருக்கு அமுது ஊட்டுவதில் பங்கம் வராமல் இருக்க, அச் சிறுவனை மறைத்து வைத்து, சுவாமிகளை உண்ண அழைக்கிறார்கள். சுவாமிகள் வந்து உட்கார்ந்தவுடன் மூத்த திருநாவுக்கரசையும் வரச்சொல்ல, அதற்கு அப்பூதியார் "அவன் இங்கு இப்போது உதவான்" என்று சொல்ல, பிறகு எல்லா விஷயங்களையும் அறிந்து கொண்டு திருநாவுக்கரசர், இறந்த மகனை கோயிலுக்கு எடுத்துவரச்சொல்லி "ஒன்று கொலாம் என்ற இத்திருப்பதிகத்தைப்பாட, சிறுவன் தூங்கி விழித்தவன்போல விஷம் நீங்கி எழுந்து விடுகிறான். என்னே அதிசயம்! இதோ அந்த அற்புதப் பதிகம் :

பொது | பண் : இந்தளம்
திருநாவுக்கரசர் அருளியது | ராகம் : நாதநாமகிரியை

திருச்சிற்றம்பலம்

ஒன்றுகொலாமவர் சிந்தையுயர்வரை
ஒன்றுகொலா முயரும் மதிசூடுவர்
ஒன்றுகொலா மிடுவெண்டலை கையது
ஒன்றுகொலா மவரூர்வதுதானே. 1

இரண்டுகொலாமிமையோர் தொழுபாதம்
இரண்டுகொலாமிலங்கும் குழைபெண்ணாண்
இரண்டுகொலாமுருவஞ் சிறுமான்மழு
இரண்டுகொலாமவர் எய்தினதாமே. 2

மூன்றுகொலாமவர் கண்ணுதலாவன
மூன்றுகொலாமவர் சூலத்தின் மொய்யிலை
மூன்றுகொலங்கணை கையது வில்நாண்
மூன்றுகொலாம் புரமெய்தனதாமே. 3

நாலுகொலாமவர் தம் முகமாவன
நாலுகொலாஞ் சனனம் முதற்றோற்றமும்
நாலுகொலாமவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொலாமறை பாடினதாமே. 4

அஞ்சுகொலா மவராடரவின் படம்
அஞ்சுகொலாமவர் வெல்புலனாவன
அஞ்சுகொலாமவர் காயப்பட்டான்கணை
அஞ்சுகொலா மவராடினதாமே. 5

ஆறுகொலாமவரங்கம் படைத்தன
ஆறுகொலாவர்தம் மகனார் முகம்
ஆறுகொலாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொலாஞ் சுவையாக்கினதாமே. 6

ஏழுகொலாமவ ரூழிபடைத்தன
ஏழுகொலாமவா கண்ட விருங்கடல்
ஏழுகொலாமவ ராளுமுலகங்கள்
ஏழுகொலாமிசை யாக்கினதாமே. 7

எட்டுக்கொலா மவரீறில் பெருங்குணம்
எட்டுக்கொலாமவர் சூடுமினமலர்
எட்டுக்கொலாமவர் தோளிணையாவன
எட்டுக்கொலாம் திசையாகினதாமே. 8

ஒன்பதுபோலவர் வாசல் வகுத்தன
ஒன்பதுபோலவர் மார்பினினூலிழை
ஒன்பதுபோலவர் கோலக் குழற்சடை
ஒன்பதுபோலவர் பாரிடந்தானே. 9

பத்துக்கொலாமவர் பாம்பின்கண் ப[illegible]பின்பல்
பத்துக்கொலாமெயிறந் நெரிந்து[illegible]ன
பத்துக்கொலாமவர் காயப்பட்டா தலை
பத்துக்கொலாமடியார் செய்கைதானே. 10

20. சர்ம வியாதிகள் தீர

"படை, மேகம், சொறி, அம்மை மற்றும்
அனைத்து சர்ம வியாதிகள் குணமடைய"

சுந்தரர் அருளியது. திருவாவடுதுறையில் வழிபட்டு வணங்கிப் பிறகு திருத்துருத்தி எனும் தலத்தை அடைகிறார் சுந்தரர். அவ்வமயம் அவருக்கு உடம்பில் கொப்புளங்கள்

வருகின்றன. பிணியை அகற்றுமாறு ஈசனை வேண்டிப்பாடுகிறார். திருவேள்விக்குடியிலுள்ள ஈசனையும் சேர்த்து வேண்டிப் பாடியருளினார். ஈஸ்வரன் சுந்தரரை கோயிலில் வடக்கிலுள்ள குளத்தில் மூழ்கி எழுமாறு பணிக்க, அவ்வாறே சுந்தரர் குளத்தில் மூழ்கி எழுந்திருக்க பிணி முற்றிலும் நீங்குகிறது.

7–ஆம் திருமுறை

திருத்துருத்தியும்–திருவேள்விக்குடியும் பண் : காந்தாரம்
சுந்தரர் தேவாரம் ராகம் : நவரோஸ்

திருச்சிற்றம்பலம்

மின்னுமா மேகங்கள் பொழிந்திழிந் தருவி
வெடிபடக் கரையொடு திரைகொணர்ந் தெற்றும்
அன்னமாங் காவிரி அகன்கரை யுறைவார்
அடியினை தொழுதெழும் அன்பராம் அடியார்
சொன்ன வாறறிவார் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
என்னைநான் மறக்குமா றெம்பெருமானை
என்னுடம்பு அடும்பிணி யிடர்கெடுத்தானை. 1

கூடுமா றுள்ளன கூடியுங் கோத்துங்
கொய்புன வேன லோடை வனஞ் சிதறி
மாடுமா கோங்கமே மருதமே பொருது
மலையெனக் குலைகளை மறிக்குமா றுந்தி
ஓடுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
பாடுமா றறிகிலே னெம்பெரு மானைப்
பழவினை யுள்ளன பற்றறுத் தானை. 2

கொல்லுமால் யானையின் கொம்பொடு வம்பார்
கொழுங்கனிச் செழும்பயன் கொண்டு கூட்டெய்திப்
புல்கியுந் தாழ்ந்தும் போந்து தவஞ்செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளார் அடிகளைச் செடியனேன் நாயேன்
சொல்லுமா றறிகிலேன் எம்பெரு மானைத்
தொடர்ந்திடுங் கடும்பிணித் தொடர்வறுத்தானை 3

பொறியுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொழிந்திழிந் தருவிகள் புன்புலங் கவரக்
கறியுமா மிளகொடு கதலியும் உந்திக்
கடலுற விளைப்பதே கருதித்தன் கைபோய்
எறியுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
அறியுமா றறிகிலேன் எம்பெரு மானை
யருவினையுள்ளன ஆசறுத் தானை. 4

பொழிந்திழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நன்மல ருந்தி
இழிந்திழிந் தருவிகள் கடும்புன லீண்டி
எண்திசை யோர்களும் ஆடவந் திங்கே
சுழிந்திழி காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன் பிதற்றுமா றெம்பெரு மானை
உற்றநோய் இற்றையே அறவொழித் தானை 5

புகழுமா சந்தனத் துண்டமோ டகிலும்
பொன்மணி வரன்றியு நன்மல ருந்தி
அகழுமா அருங்கரை வளம்படப் பெருகி
ஆடுவார் பாவந்தீர்த் தஞ்சனம் அலம்பித்

திகழுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
இகழுமா றறிகிலேன் எம்பெரு மானை
இழித்தநோய் இம்மையே யொழிக்கவல்லானை. 6

வரையின்மாங் கனியொடு வாழையின் கனியும்
வருடியும் வணக்கியு மராமரம் பொருது
கரையுமா கருங்கடல் காண்பதே கருந்தாய்க்
காம்பீலி சுமந்தொளிர் நித்திலங் கைபோய்
விரையுமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
உரையுமா றறிகிலேன் எம்பெரு மானை
உலகறி பழவினை அறவொழித் தானை. 7

ஊருமா தேசமே மனமுகந்து உள்ளிப்
புள்ளினம் பலபடிந் தொண்கரை யுகளக்
காருமா கருங்கடல் காண்பதேட கருத்தாய்க்
கவரிமா மயிர்சுமந்து ஒண்பளிங் கிடறித்
தேருமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
ஆருமா றறிகிலேன் எம்பெரு மானை
அம்மைநோய் இம்மையே ஆசறுத் தானை. 8

புலங்களை வளம்படப் போக்கறப் பெருகிப்
பொன்களே சுமந்தெங்கும் பூசல்செய் தார்ப்ப
இலங்குமா முத்தினோ டினமணி யிடறி
யிருகரைப் பெருமரம் பீழ்ந்து கொண் டெற்றிக்

கலங்குமா காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் செடியனேன் நாயேன்
விலங்குமா றறிகிலேன் எம்பெரு மானை
மேலைநோய் இம்மையே விடுவித் தானை. 9

மங்கையோர் கூறுகந் தேறுகந் தேறி
மாறலார் திரிபுரம் நீறெழச் செற்ற
அங்கையான் கழலடி யன்றிமற் றறியான்
அடியவர்க் கடியவன் தொழுவனா ரூரன்
கங்கையார் காவிரித் துருத்தியார் வேள்விக்
குடியுளா ரடிகளைச் சேர்த்திய பாடல்
தங்கையால் தொழுதுதந் நாவின்மேற் கொள்வார்
தவநெறி சென்றம ருலகமாள் பவரே. 10

21. என்றும் உணவு கிடைக்க

திருநாவுக்கரசு தில்லையில் அருளியது. அவர் திருமுதுகுன்றம் சென்று வழிபட்டு சிதம்பரத்திற்கு வருகிறார். கோயில் உள்ளே நுழையும்போது குடதிசை வாயிலாக வருகிறார். பக்தர்கள் எதிர்கொண்டு அழைக்க உள்ளே சென்று எதிரே பொன்னம்பலநாதனைக் கண்டு பக்தி பரவசமாகி, தலைமேல் கைகூப்பி "பத்தனாய்ப் பாடமாட்டேன்" என்ற பாடல் பாடி, அஞ்சலி செலுத்தி, மகிழ்ச்சி மேலீட்டினால் பாடியருளிய பதிகம் "அன்னம் பாலிக்கும்' என்றத் திருப்பதிகம்

5–ஆம் திருமுறை

தில்லை கோவில்
திருநாவுக்கரசர் அருளியது

திருக்குறுந்தொகை
ராகம்: நாதநாமகிரியை

திருச்சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்குமேலு மிப்பூமிசை
என்னன் பாலிக்குமாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே. 1

அரும்பற்றப்பட வாய்மலர் கொண்டுநீர்
சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக்காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம்பிரானையே. 2

அரிச் சுற்ற வினையாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற்றக் கிடந்தார் என்றயலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்படாமுனந்
திருச்சிற்றம்பலஞ் சென்றடைந்துய்மினே. 3

அல்லலென்செயும் அருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்.
தில்லை மாநகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லை யில்லதோர் அடிமை பூண்டேனுக்கே. 4

ஊனில்ஆவி வுயிர்க்கும் பொழுதெலாம்
நான்நிலாவியிருப்பன் என்னாதனைத்
தேன்நிலாவிய சிற்றம்பலவனார்
வான்நிலாவி யிருக்கவும் வைப்பரே. 5

சிட்டர் வானவர் சென்று வரங்கொளுஞ்
சிட்டர்வாழ் தில்லைச் சிற்றம்பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லுமச்
சிட்டர் பாலணுகான் செறுகாலனே. 6

ஒருத்தனார் உலகங்கட்ட கொருசுடர்
திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தினாரிளையார் விடமுண்டவெம்
அருத்தனாரடி யாரையறிவரே. 7

விண்ணிறைந்ததோர் வெவ்வழலின்னுரு
எண்ணிறைந்த விருவர்க்கறிவொணாக்
கண்ணிறைந்த கடிபொழி லம்பலத்
துண்ணிறைந்து நின்றாடுமொருவனே. 8

வில்லை வட்டப் படவாங்கி அவுணர்தம்
வல்லை வட்ட மதில்மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட்டந்திசை கைதொழுவார்வினை
ஒல்லை வட்டங் கடந்தோடுதல் உண்மையே. 9

நாடி நாரணன்நான்முக னென்றிவர்
தேடியுந் திரிந்துங் காணவல்லரோ
மாடமாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சுளிருக்கவே. 10

மதுரவாய் மொழி மங்கையோர் பங்கினன்
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த் தெடுத்தான் முடிபத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்ம்மினே. 11

22. உண்ண உணவும், இருக்க இடமும் கிடைக்க

பங்குனி உத்திர நாளில், பரவை நாச்சியார் பல தான தருமங்களைச் செய்ய வேண்டுமே என்று சுந்தரர் திருப்புகலூர் தலத்தில் ஈசனை வேண்டி, கோயில் முன்புறம், சில செங்கற்களைத் தலையணியாக வைத்துக்கொண்டு இரவு துயில, விடியற்காலை எழுந்து பார்க்கும்போது செங்கற்கள் பொன் கற்களாக மாறியிருக்கும் அதிசயத்தைக் கண்டார். அப்போது சுந்தரர் அருளிய திருப்பதிகம் இது.

7–ஆம் திருமுறை

திருப்புகலூர் பண் : கொல்லி
சுந்தரர் அருளியது ராகம் : நவரோஸ்

திருச்சிற்றம்பலம்

தம்மையே புகழ்ந்(து) இச்சை பேசினுஞ்
சார்வினுந் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே யெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மையேதரும் சோறுங்கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்(கு)
யாதும்ஐயுற வில்லையே. 1

மிடுக்கிலாதானை வீமனேவிறல்
விசயனேவில்லுக் கிவனென்று
கொடுக்கிலாதானைப் பாரியேயென்று
கூறினுங் கொடுப் பாரிலை

பொடிக்கொள் மேனியெம் புண்ணியன்
புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேல்அம ருலகம்ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 2

காணியேற்விருந் தோம்புமேயென்று
நல்லனேசுற்றம் நற்கிளை
பேணியேவிருந் தோம்புமேயென்று
பேசினுங்கொடுப் பாரிலை
பூணிபூண்டுழப் புட்சிலம்புந்தண்
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆணியாய்அம ருலகம்ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 3

நரைகள்போந்துமெய் தளர்ந்துமூத்துடல்
நடுங்கிநிற்குமிக் கிழவனை
வரைகள்போல்திரள் தோளனேயென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புரைவெள்ளே றுடைப் புண்ணியன்
புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
அரையானயம ருலகம் ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 4

வஞ்சநெஞ்சனை மாசழக்கனைப்
பாவியைவழக் கில்லியைப்
பஞ்சதுட்டனைச் சாதுவேயென்று
பாடினுங்கொடுப் பாரிலை
பொன்செய்செஞ்சடைப் புண்ணியன்
புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
நெஞ்சில்நோயறுத்(து) உஞ்சுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 5

நலமிலாதானை நல்லனேயென்றும்
நரைத்தமாந்தரை யிளையனே
குலமிலாதானைக் குலவனேயென்று
கூறினுங்கொடுப் பாரிலை
புலமெலாம்வெறி கமழும்பூம்
புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
அலமரா(து)அம ருலகம்ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 6

நோயனைத்தடந் தோளனேயென்றும்
நொய்யமாந்தரை விழுமிய
தாயன்றோபுல வோர்க்கெலாமென்று
சாற்றினுங்கொடுப் பாரிலை
போயுழன்றுகண் குழியாதேயெந்தை
புகலூர்பாடுமின் புலவீர்காள்
ஆயமின்றிப்போய் அண்டம் ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 7

எள்விழுந்திடம் பார்க்குமாகிலும்
ஈக்குமீகில னாகிலும்
வள்ளலேயெங்கள் மைந்தனேயென்று
வாழ்த்தினுங்கொடுப் பாரிலை
புள்ளெலாஞ்சென்று சேரும்பூம்
புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
அள்ளற்பட்டழுந் தாதுபோவதற்
கியாதுமையுற வில்லையே. 8

கற்றிலாதானைக் கற்றுநல்லனே
காமதேவனை யொக்குமே
முற்றிலாதானை முற்றனேயென்று
மொழியினுங்கொடுப் பாரிலை

பொத்திலாந்தைகள் பாட்டறாப்
புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
அந்தனாயம ருலுகமாள்வதற்
கியாதுமையுற வில்லையே. 9

தையலாருக்கோர் காமனேசால
நலவழகுடை யையனே
கையுலாவிய வேலனேயென்று
கழறினுங்கொடுப் பாரிலை
பொய்கைவாவியின் மேதிபாய்
புகலூரைப்பாடுமின் புலவீர்காள்
ஐயனாரம ருலகம் ஆள்வதற்
கியாதுமையுற வில்லையே. 10

செறுவினிற்செழுங் கமலமோங்குதென்
புகலூர்மேவிய செல்வனை
நறவம்பூம்பொழில் நாவலூரன்
வனப்பகையப்பன் சடையன்றன்
சிறுவன்வன்றொண்ட னூரன்பாடிய
பாடல்பத்திவை வல்லவர்
அறவனாரடி சென்றுசேர்வதற்
கியாதுமையுற வில்லையே. 11

23. களவு போன பொருள் கிடைக்க

"களவினால் பறிகொடுத்த பொருள்கள்,
காணாமல்போன பொருள்கள் கிடைக்க"

சேர நாட்டில் கொடுங்கோளூரில் சேரமான் பெருமான் சுந்தரரை சிறந்த முறையில் வரவேற்று அவரை திருவஞ்சைக்களம் கோயிலுக்கு அழைத்துச் சென்று அங்கு வழி

பட்டு, தரிசித்து பிறகு சேர நாட்டிலேயே சுந்தரர் சில நாட்கள் தங்கினார். பிறகு திருவாரூர் தியாகேசப் பெருமானைத் தரிசிக்க விருப்பம் மூண்டதால், "அரூரானை மறக்கலுமாமே" என்று கூறி சேரமானிடம் விடைபெற்றுச் செல்ல, அரசன் ஏராளமான பொன், மணி, முத்து எல்லாவற்றையும் மூட்டையாகக் கட்டி ஆட்கள் மூலம் அவருடன் அனுப்ப, திருமுருகன்பூண்டி ஊர் வழியாகப் போகும்போது சிவபெருமான் பூதகணங்களை வேடர்களாக்கி அந்த மூட்டைகளை வழிப்பறி செய்து செல்கிறார். திருமுருகன் பூண்டி கோயிலுக்குள் சென்று சுந்தரர் "கொடுகு வெஞ்சிலை" என்ற பதிகம் அருளுகிறார். அதில் ஒவ்வொரு பாட்டு முடிவிலும் "எத்துக்கு இங்கிருந்தீர்" என வினவ, மறுபடியும் எல்லாப் பொருள்களையும் ஈசன் சிவகணங்கள் மூலம் சேர்ப்பிக்கின்றார்.

திருமுருகன்பூண்டி — பண் : பழம்பஞ்சுரம்
சுந்தரர் அருளியது — ராகம் : சங்கராபரணம்

திருச்சிற்றம்பலம்

கொடுகுவெஞ்சிலை வடுகவேடுவர்
விரவலாமை சொல்லித்
திடுகுமொட்டெனக் குத்திக்கூறைகொண்டு
ஆறலைக்கு மிடம்

முடுகுநாறிய வடுகர்வாழ்முருகன்
பூண்டி மாநகர்வாய்
இடுகுநுண்ணிடை மங்கைதன்னொடும்
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 1

வில்லைக்காட்டி வெருட்டிவேடுவர்
விரவலாமை சொல்லிக்
கல்லினாலெறிந் திட்டுமோதியுங்
கூறைகொள்ளுமிடம்

முல்லைத்தாது மணங்கமழ்முருகன்
பூண்டிமாநகர்வாய்
எல்லைக்காப்பதொன் றில்லையாகில்
நீர்எத்துக் கிங்கிருந் தீரெம்பிரானிரே. 2

பசுக்களே கொன்று தின்றுபாவிகள்
பாவமொன்றறியார்
உசிர்க்கொலைபல நேர்ந்துநாடொறும்
கூறைகொள்ளுமிடம்
முசுக்கள்போற்பல வேடர்வாழ்முருகன்
பூண்டிமாநகர்வாய்
இசுக்கழியப் பயிக்கங் கொண்டுநீர்
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 3

பீறற்கூறை யுடுத்தோர்பத்திரங்
கட்டி வெட்டனராய்ச்
சூறைபங்கிய ராகிநாடொறுங்
கூறைகொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடிவாழ்முருகன்
பூண்டிமாநகர்வாய்
ஏறுகாலிற்ற தில்லையாய்விடில்
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 4

தயங்குதோலை யுடுத்தசங்கர
சாமவேதமோதீ
மயங்கியூரிடு பிச்சைக்கொண்டுணும்
மார்க்கமொன்றறியீர்
முயங்குபூண்முலை மங்கையாளொடுமுருகன்
பூண்டிமாநகர்வாய்
இயங்கவும் மிடுக்குடையராய்விடில்
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 5

விட்டிசைப்பன் கொக்கரைகொடு
கொட்டித்தத்தளகம்
கொட்டிப்பாடுமித் துந்துமியொடு
குடமுழாநீர்மகிழ்வீர்
மொட்டலர்ந்து மணங்கமழ்முருகன்
பூண்டிமாநகர்வாய்
இட்டபிச்சைகொண் டுண்பதாகில்நீர்
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 6

வேதமோதிவெண் ணீறுபூசிவெண்
கோவணந்தற்றயலே
ஓதம்மேவிய ஒற்றியூரையு
முத்திநீர் மகிழ்வீர்
மோதிவேடுவர் கூறைகொள்ளும்முருகன்
பூண்டிமாநகர்வாய்
ஏதுகாரணம் ஏதுகாவல்கொண்(டு)
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 7

படவரவு நுண்ணேரிடைப்
பணைத்தோள் வரிநெடுங்கண்
மடவரல் உமைநங்கை
தன்னையோர்பாகம் வைத்துகந்தீர்
முடவரல்லீர் இடரிலீர்முருகன்
பூண்டிமா நகர்வாய்
இடவமேறியும் போவதாகில்நீர்
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 8

சாந்த மாகவெண் ணீறுபூசிவெண்
பல்தலைகலனா

வேய்ந்த வெண்பிறைக் கண்ணிதன்னையோர்
பாகம்வைத்துகந்தீர்
மோந்தை யோடுமுழக்கறா முருகன்
பூண்டிமா நகர்வாய்
ஏந்துபூண்முலை மங்கைதன்னொடும்
எத்துக்கிங் கிருந்தீரெம்பிரானிரே. 9

முந்திவானவர் தாந்தொழும்முருகன்
பூண்டிமா நகர்வாய்
பந்தணைவிரற் பாவைதன்னையோர்
பாகம் வைத்தவனைச்
சிந்தையிற்சிவ தொண்டனூரன்
உரைத்தன பத்துங்கொண்(டு)
எந்தம் அடிகளை ஏத்துவாரிட
ரொன்றுந்தாமிலரே. 10

24. பகைமை, விரோதம் நீங்க

"பகைவர்களை வெல்லவும்
விரோதத்தன்மை நீங்கவும்"

8-ஆம் திருமுறை

தில்லை
மாணிக்கவாசகர்

ராகம் : மோகனம்

திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவாறு உந்தீபற. 1

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
    ஒன்றும் பெருமிகை உந்தீபற. 2

தச்சு விடுத்தலும் தாம்அடி யிட்டலும்
அச்சு முறிந்ததென்று உந்தீபற
    அழிந்தன முப்புரம் உந்தீபற. 3

உய்யவல் லார்ஒரு மூவரைக் காவல்கொண்டு
எய்யவல் லானுக்கே உந்தீபற
    இளமுலை பங்கனென்று உந்தீபற. 4

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடியவா பாடி உந்தீபற
    உருத்திர நாதனுக்கு உந்தீபற. 5

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டுஅன்று
சாவாது இருந்தான்என்று உந்தீபற
    சதுர்முகன் தாதைஎன்று உந்தீபற. 6

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான்என்று உந்தீபற
    கலங்கிற்று வேள்விஎன்று உந்தீபற. 7

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேஏடி உந்தீபற
    பணைமுலை பாகனுகக்கு உந்தீபற. 8

புரந்தர னார்ஒரு பூங்குயிலாகி
மரந்தனில் ஏறினார் உந்தீபற
    வானவர் கோன்என்றே உந்தீபற. 9

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி உந்தீபற
தொடர்ந்த பிறப்பற உந்தீபற. 10

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி உந்தீபற
கொங்கை குலுங்கநின்று உந்தீபற. 11

உண்ணப் புகுந்த பகன் ஒளித்து ஓடாமே
கண்ணைப் பறித்தவாறு உந்தீபற
கருக்கெட நாமெல்லாம் உந்தீபற. 12

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகம்நெரித்து உந்தீபற
தொல்லை வினைகெட உந்தீபற. 13

நான்மறை யோனும் மகத்துஇய மான்படப்
போம்வழி தேடுமாறு உந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற. 14

சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவாறு உந்தீபற
மயங்கிற்று வேள்விஎன்று உந்தீபற. 15

தக்கனார் அன்றே தலைஇழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின்று உந்தீபற
மடிந்தது வேள்விஎன்று உந்தீபற. 16

பாலக னார்க்குஅன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற
குமரன் தன் தாதைக்கே உந்தீபற. 17

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை அரிந்ததுஎன்று உந்தீபற
உகிரால் அரிந்ததுஎன்று உந்தீபற. 18

தேரை நிறுத்தி மலைஎடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவாறு உந்தீபற
இருபதும் இற்றதென்று உந்தீபற. 19

ஏகாசமிட்ட இருடிகள் போகாமல்
ஆகாசங் காவலென்றுந்தீ பற
அதற்கப்பாலுங் காவலென்றுந்தீபற. 20

25. பகைமை நீங்க

திருஞானசம்பந்தர் மதுரைக்கு மங்கையர்க்குக்கரசியரும், குலச்சிறையாரும். வேண்டிக்கொண்டபடி வருகிறார். அவருடைய பக்தர்களும், தொண்டர்களும் புடைசூழ வருகிறார்கள். இதை அறிந்த சமணர்கள் அரசனிடம் ஓடிச்சென்று சைவப் பெரியாரும் சிவனடியார்களும் வந்து ஒரு மடத்தில் தங்கிபிருக்கின்றனர். மறை ஓதுகிறார்கள். சிவநாமத்தை ஒலிக்கச் செய்கின்றனர். நாங்கள் நேரில் கண்டதால் "கண்டு முட்டு" என்று சொல்ல, அரசன் "இதைக் கேட்டேனே அந்தோ!", "கேட்டு முட்டு" என்று சொல்லி அவர்கள் கேட்டுக் கொண்டபடி, சமணர்கள் மந்திரம் சொல்லி மடத்தை எரிக்குமாறு சொல்கிறான். உடனே சமணர்கள் அவர்கள் கற்ற மந்திரத்தை ஓத பயனளிக்கவில்லை. ஆகவே அவர்களே தீப்பந்தங்கள் கொண்டு வந்து அந்த மடத்தில் ஒரு பக்கம் தீ வைக்க, மடம் தீ பற்றி எரிகிறது. உடனே அடியார்கள் ஓடி சம்பந்தரிடம் நடந்தவற்றைச் சொல்ல, சம்பந்தர் அவர்களைப்பற்றி கவலைப்படாதீர் என்று சொல்லி இறைவனை

வேண்டி, "செய்யனே திருஆலவாய் மேவிய ஐயனே"என்ற இந்தத் திருப்பதிகத்தைப் பாட தீ அணைந்து விடுகிறது. ஆனால் இப்பதிகத்தில் "அமணர் கொளுவும் சுடர் பையவே சென்று பாண்டியர்க்கு ஆகவே" என்று பாடியதால் அந்தத் தீயானது மெல்லச்சென்று பாண்டிய மன்னன் உடலில் புகுந்து அரசனுட் த வெப்பு நோய் உண்டாகிறது. அரசன் எரிச்சலால் கதறுகிறான். சமணர்கள் வந்து மந்திரத்தால் அதைப் போக்குவதாகச் சொல்லி ஜபிக்க வெப்பு நோய் அதிகமாகிறது. அப்பொழுது தான் திருஞானசம்பந்தர் அங்கு வந்து "மந்திரமாவது நீறு" என்ற பதிகத்தைப் பாட வெப்புநோய் அரசனை விட்டு அகலுகிறது.

3–ஆம் திருமுறை

திருஆலவாய்(மதுரை) பண் : கௌசிகம்
திருஞானசம்பந்தர் அருளியது ராகம் : பைரவி

திருச்சிற்றம்பலம்

செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. 1

சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேபஞ்ச லென்றருள் செய்யெனை
எத்த ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பத்திமன் தென்னன் பாண்டியற் காகவே. 2

தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேயஞ்ச லென்றருள் செய்யெனை
எக்க ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பக்க மேசென்று பாண்டியற்காகவே. 3

சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேயஞ்ச லென்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பட்டி மன்தென்னன் பாண்டியற் காகவே. 4

நண்ண லார்புரம் மூன்றெரி ஆலவாய்
அண்ண லேயஞ்ச லென்றருள் செய்யெனை
எண்ணி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பண்ணி யல்தமிழ்ப் பாண்டியற் காகவே. 5

தஞ்ச மென்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்ச லென்றருள் ஆலவா யண்ணலே
வஞ்சஞ் செய்தம ணர்கொளு வுஞ்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற் காகவே. 6

செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாஅஞ்ச லென்றருள் செய்யெனைக்
கங்கு லார்அமண் கைய ரிடுங்கனல்
பங்கமில் தென்னன் பாண்டியற் காகவே. 7

தூர்த்தன் வீரந் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேயஞ்ச லென்றருள் செய்யெனை
ஏத்தி லாஅம ணர்கொளு வுஞ்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற் காகவே. 8

தாவி னான்அயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாயருள்
தூவி லாஅம ணர்கொள வுஞ்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற் காகவே. 9

எண்டி சைக்கெழில் ஆலவாய் மேவிய
அண்ட னேயஞ்ச லென்றருள் செய்யெனைக்
குண்ட ராம்அம ணர்கொளு வுஞ்சுடர்
பண்டிமன் தென்னன் பாண்டியற் காகவே. 10

அப்பன் ஆலவா யாதி யருளினால்
வெப்பந் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே 11

26. நவக்கிரக தோஷம் நீங்க

(கோளறு திருப்பதிகம்)

திருஞானசம்பந்தர் திருமறைக்காடு எனப்படும் வேதாரண்ய தலத்தில் அருளியது. அந்த திருத்தல கோயிலின் பிரதான வாயில் கதவு வேதத்தால் பூசிக்கப்பட்டு பல ஆண்டுகளாக அடைபட்டிருந்தது. பக்கத்தில் உள்ள மற்றொரு வாயில் வழியாக பக்தர்கள் கோயிலினுள் சென்று தரிசித்து வருவார்கள்.

இந்த திருத்தலத்திற்கு திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் இருவரும் வந்தார்கள். பிரதான கோபுர வாயில் வழியாகவே கோயிலுக்குள்ளே செல்ல விரும்பி, அடைபட்டிருந்த கதவைத் திறக்க, திருநாவுக்கரசர் ஒரு பதிகம் பாடியருள கதவு திறக்கப்படுகிறது. கோயிலுள்ளே சென்று வழிபட்டு வெளியே வந்து அந்தக் கதவு மறுபடியும் மூட திருஞானசம்பந்தர் "சதுரம் மறைதான்" என்ற பதிகம் பாடியருளுகிறார். கதவு மூடப்படுகிறது.அந்த தலத்தில் அவர்கள் இருவரும் தங்கியிருந்தபோது, மதுரையிலிருந்து சில அடியார்கள் வந்து

மந்திரி குலச்சிறையாரும் அரசியாரும் அனுப்பியதாகச் சொல்லி ஞானசம்பந்தரைப் பார்த்து "ஐயா எங்கள் நாட்டில் சைவம் மறைந்து சமணம் மேலோங்கலாயிற்று. மன்னனும்கூட சமண சமயத்தைத் தழுவினான். ஆயினும், மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும், எவரும் அறியா வண்ணம் சிவ பூசை செய்து வருகிறார்கள். தாங்கள் ஒருவரால்தான் மீண்டும் பாண்டிய நாட்டில் சைவம் தழைக்கச்செய்ய முடியும். ஆகவே தங்களை அழைத்துவரச் சொன்னார்கள்" என்று, சொல்ல சம்பந்தர் சம்மதம் தெரிவித்து மதுரைக்குப் புறப்படப் போகும் சமயம், திருநாவுக்கரசர் அவரைப் பார்த்து, "ஐயா நீவீர் சிறுவர், வயது முதிர்ந்த என்னையே சமணர்கள் எவ்வளவோ துன்புறுத்தியதைத் தாங்கள் அறிவீர்கள். தவிர இன்று நாளும் கோளும் சரியாயில்லை, ஆகவே நீர் போகவேண்டாம்" என்று சொல்கிறார். அதற்கு ஞானசம்பந்தர் "ஐயா! நாளும் கோளும் சிவனடியார்களை ஒருபோதும் பாதிக்காது" என்று சொல்லி இந்த கோளறு பதிகம் எனப்படும் "வேயுறு தோளிபங்கள்" என்ற திருப்பதிகத்தை அருளினார். பிறகு பாண்டி நாடு சென்று. மன்னனின் வெப்பு நோயை குணப்படுத்தி, சமணர்களுடன் அனல்வாதம், புனல்வாதம் முதலியன செய்து வென்று. மன்னனின் கூனையும் நிமிர்த்துகிறார் நமது சம்பந்தர். சைவ சமயத்தை அங்கு மீண்டும் நிலைநாட்டினார்.

2-ம் திருமுறை

பொது — பண் : பியந்தைக்காந்தாரம்

திருஞானசம்பந்தர் அருளியது — ராகம் : நவரோஸ்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை உடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொடு ஒன்றோடு ஏழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 2

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேலணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்

திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வமான பலவுங்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 3

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறைஓதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடை ஏறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுண ரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே, 5

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்துஎன்
உளமே புகுந்த வதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடுகரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன் மங்கை ஒருபாகமாக
விடைஏறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
வெப்போடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய் தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்துஎன்
உளமே புகுந்த அதனால்

ஏழ்கடல் சூழி லங்கை அரையன்த னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுஏறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கும் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலை கடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்

புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில் கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. 11

27. சனிகிரக தோஷம் நீங்க

"அஷ்டமத்துசனி, ஏழரை நாட்டுச்சனி
மற்றும் சனிகிரகத்தால் வரும் தோஷம் நீங்க"

திருஞானசம்பந்தர் திருநாள்ளாற்றில் அருளிய பதிகம். இதனைப் பச்சைப் பதிகம் எனவும் சொல்லுவர். சமணர்களுடன் மதுரையில் அனல்வாதம் செய்தபோது, சம்பந்தர்தாம் அருளிய பதிகங்கள் அடங்கிய ஓலைச் சுவடிகளில் ஈசனை வேண்டி கயிறு சாத்திப் பார்த்ததில் இந்தப் பதிகம் எழுதிய ஓலை கிடைத்தது. அதனை "தளிரிளவளரொளி" என்ற பதிகத்தைப் பாடிக்கொண்டே அனலில் இட்டார். என்னே அதிசயம்! அந்த ஓலை எரிந்து போகாமல் அப்படியே பச்சையாகவே இருந்தது. சமணர்கள் போட்ட ஓலை எரிந்து சாம்பலாகியது. ஆகவே இந்தப் பதிகத்தைப் பச்சைப் பதிகம் என்று சொல்லுகிறார்கள்.

1–ஆம் திருமுறை

திருநாள்ளாறு — பண் : பழந்தக்கராகம்
திருஞானசம்பந்தர் அருளியது — ராகம் : சுத்தசாவேரி

திருச்சிற்றம்பலம்

போகமார்த்த பூண்முலையாள் தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண ஆடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 1

தோடுடைய காதுடையன் தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன் பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான் மேயது நள்ளாறே. 2

ஆன்முறையா லாற்றவெண்ணீ றாடி அணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம் பத்தர்ப் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ் சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான் மேயது நள்ளாறே. 3

புல்கவல்ல வார்சடைமேற் பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை மதியோடு டன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற் பாதநி ழற்சேர
நல்கவல்ல நம்பெருமான் மேயது நள்ளாறே. 4

ஏறுதாங்கி யூர்திபேணி யேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர் ஆடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த மார்பில் நிரைகொன்றை
நாறுதாங்கும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 5

திங்களுச்சி மேல்விளங்குந் தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன் என்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந் தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான் மேயது நள்ளாறே. 6

வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி விண்கொண்மு ழவதிர
அஞ்சிடத்தோர் ஆடல்பாடல் பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித் திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 7

சிட்டமார்ந்த மும்மதிலுஞ் சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ றாடுவ தன்றியும் போய்ப்
பட்டமார்ந்த சென்னிமேலோர் பால்ம தியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான் மேயது நள்ளாறே. 8

உண்ணலாகா நஞ்சுகண்டத் துண்டுட னேயொடுக்கி
அண்ணலாகா வண்ணல்நீழல் ஆரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென் றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான் மேயது நள்ளாறே. 9

மாசுமெய்யர் மண்டைத்தேரர் குண்டர்கு ணம்இலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி மும்மதி ளும்உடனே
நாசஞ்செய்த நம்பெருமான் மேயது நள்ளாறே. 10

தண்புனலும் வெண்பிறையுந் தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல் பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ டுலகிலு றைவாரே. 11

28. எடுத்த காரியம் நிறைவேற

திருஞானசம்பந்தர் திருஆலவாயில் சமணர்களுடன் சமய வாதம் செய்யச் சென்றபோது எல்லாம் வல்ல சொக்க நாதனை வேண்டியருளிய திருப்பதிகம். அவ்வாறே சொக்கேசன் அருளால் மன்னன் வெப்பு நோயைத் தீர்த்து, சமணர்களுடன் அனல்வாதம் முதலியன செய்து வென்றார்.

3–ஆம் திருமுறை

திருஆலவாய் — பண் : பழம்பஞ்சுரம்
திருஞானசம்பந்தர் அருளியது. — ராகம் : சங்கராபரணம்

திருச்சிற்றம்பலம்

வேதவேள்வியை நிந்தனை செய்துழல்
ஆத மில்லி அமணொடு தேரரை
வாதில்வென்றழிக் கத்திரு வுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே.

வைதி கத்தின் வழியொழு காதவக்
கைத வம்முடை காரமண் தேரரை
எய்தி வாதுசெ யத்திரு வுள்ளமே
மைதி கழ்தரு மாமணி கண்டனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 2

மறைவ ழக்கமி லாதமா பாவிகள்
பறித லைக்கையர் பாயுடுப் பார்களை
முறிய வாதுசெ யத்திரு வுள்ளமே
மறியு லாங்கையில் மாமழு வாளனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 3

அறுத்த வங்கமா றாயின நீர்மையைக்
கறுத்த வாழமண் கையர்கள் தம்மொடும்
செறுத்து வாதுசெ யத்திரு வுள்ளமே
முறித்த வாண்மதிக் கண்ணி முதல்வனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 4

அந்த ணாளர் புரியும் அருமறை
சிந்தை செய்யா அருகர் திறங்களைச்
சிந்த வாதுசெ யத்திரு வுள்ளமே
வெந்த நீற தணியும் விகிர்தனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 5

வேட்டு வேள்விசெ யும்பொரு ளைவிளி
மூட்டு சிந்தை முருட்டமண் குண்டரை
ஓட்டி வாதுசெ யத்திரு வுள்ளமே
காட்டி லானை உரித்தஎங் கள்வனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 6

அழல தோம்பும் அருமறை யோர்திறம்
விழல தென்னும் அருகர் திறத்திறம்
கழல வாதுசெய த்திரு வுள்ளமே
தழல் இலங்கதிருவுருஞ் சைவனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 7

நீற்று மேனிய ராயினர் மேலுற்ற
காற்றுக் கொள்ளவும் நில்லா அமணரைத்
தேற்றி வாதுசெ யத்திரு வுள்ளமே
ஆற்ற வாள ரக்கற்கும் அருளினாய்

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 8

நீல மேனி அமணர் திறத்துநின்
சீலம் வாதுசெ யத்திரு வுள்ளமே
மாலும் நான்முக னுங்காண் பரியதோர்
கோல மேனிய தாகிய குன்றமே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 9

அன்று முப்புரஞ் செற்ற அழகநின்
துன்று பொற்கழல் பேணா அருகரைத்
தென்ற வாதுசெய த்திரு வுள்ளமே
கன்று சாக்கியர் காணாத் தலைவனே

ஞாலம் நின்புக ழேமிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும்எம் ஆதியே. 10

கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடல் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச்சம் பந்தன் மதித்தஇப்
பாடல் வல்லவர் பாக்கிய வாளரே. 11

29. இடர் நீங்கி, இன்பம் பெற

திருஞானசம்பந்தர் அருளியது. அவர் திருஎறும்பியூர் முதலிய தலங்களுக்குச்சென்று வழிபட்டு 'திருநெடுங்களம்' என்ற பதியை அடைகிறார். அங்கு இறைவன் திருவருளை என்றும் மறக்காமல் இருக்கும் நிலையைத் தனக்கு அருளுமாறு வேண்டி இப்பதிகத்தைப் பாடியருளினார்.

1–ம் திருமுறை

திருஞானசம்பந்தர் பண் : பழந்தக்கராகம்
(சுத்த ஸாவேரி)

திருச்சிற்றம்பலம்

மறையுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
யென்றுன்னைப் பேசினல்லால்

குறையுடையார் குற்றமோராய்
கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 1

கனைத்தெழுந்த வெண்டிரைசூழ்
கடலிடைநஞ்சு தன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த
திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல்
பேணியிராப் பகலும்
நினைத்தெழுவார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 2

நின்னடியே வழிபடுவா
னிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே
லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும்
பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே 3

மலைபுரிந்த மன்னவன்றன்
மகளையோர்பால் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு
மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய்
தலைவநின்றாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 4

பாங்கினல்லார் படிமஞ்செய்வார்
பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு
தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா வன்பினோடுந்
தலைவநின்றாள் நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 5

விருத்தனாகிப் பாலனாகி
வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக்
கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய ஆதிதேவ
னடியினையே பரவும்
நிருத்தர்கீதர் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 6

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக்
கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த
மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்
றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டார் இடர்களையாய்
நெடுங்களமே யவனே. 7

குன்றினுச்சி மேல்விளங்குங்
கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை
அருவரைக்கீ ழடர்த்தாய்

என்றுநல்ல வாய்மொழியா
    லேத்தியிராப் பகலும்
நின்றுநைவார் இடர்களையாய்
    நெடுங்களமே யவனே. 8

வேழவெண்கொம் பொசித்தமாலும்
    விளங்கியநான் முகனும்
சூழவெங்கும் நேடவாங்கோர்
    சோதியுளாகி நின்றாய்
கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான்
    கேடிலாப் பொன்னடியின்
நீழல்வாழ்வார் இடர்களையாய்
    நெடுங்களமே யவனே. 9

வெஞ்சொல்தஞ் சொல்
    லாக்கிநின்ற வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந்
    தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால்
    தோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பார் இடர்களையாய்
    நெடுங்களமே யவனே. 10

நீடவல்ல வார்சடையான்
    மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழும் மாமறுகிற்
    சிரபுரக்கோ னலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை
    ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார்
    பாவம் பறையுமே. 11

30. லாபம், வழக்கில் வெற்றி பெற

"வழக்குகளில் வெற்றி, இதர செயல்களில் வெற்றி காண"

திருநாவுக்கரசரும், திருஞாசம்பந்தரும் திருவீழி மிழலைக்குச் சென்றார்கள். இவர்கள் செல்லும் முன்பே அந்த ஊரில் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருந்தது. இவர்கள் தம் அடியார்களுக்கும் மற்றவர்களுக்கும் உணவு அளிக்க வேண்டி ஈசனைப். பிரார்த்திக்க, பஞ்சம் நீங்கும் வரையிலும் கோயிலில் இருக்கும் பலி பீடத்தின் கிழக்கிலும், மேற்கிலும் ஒவ்வொரு பொன் படிக்காசு வைத்தருள்கிறார் சிவபெருமான். அப்பருடைய மடத்திற்குக் கிடைத்த காசு உடனே மாற்றப்பட்டு தாமதமின்றி எல்லோருக்கும் உணவிட முடிந்தது. ஆனால் திருஞான சம்பந்தருக்குக் கிடைத்த பொன்காசு சற்று மாற்று குன்றியிருந்ததால், அதை மாற்றி அடியார்களுக்கு உணவிட சற்று காலதாமதமாயிற்று. அப்போது திருஞானசம்பந்தர் தனக்கும் மாற்றுக்குறைவில்லாத காசை அருளும்படி வேண்டிப் பாடிய பதிகம் இது. உடனே இவருக்கும் நல்ல படிக்காசு கிடைத்தது. தாமதமின்றி எல்லோருக்கும் உணவு அளிக்கப்பட்டது

1–ஆம் திருமுறை

திருவீழிமிழலை பண் : குறிஞ்சி
திருஞானசம்பந்தர் அருளியது ராகம் : ஹரிகாம்போதி

திருச்சிற்றம்பலம்

வாசி தீரவே காசு நல்குவீர்
மாசில் மிழலையீர் ஏசல்இல்லையே 1

இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர்
கறைகொள் காசினை முறைமை நல்குமே 2

செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர்
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே. 3

நீறுபூசினீர் ஏறதேறினீர் கூறும்மிழலையீர்
பேறும் அருளுமே 4

காமன் வேவவோர் தூமக்கண்ணினீர்
நாமம் மிழலையீர் சேமம் நல்குமே. 5

பிணிகொள் சடையினீர் மணிகொள்மிடறினீர்
அணிகொள் மிழலையீர் பணிகொண்டருளுமே. 6

மங்கை பங்கினீர் துங்க மிழலையீர்
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே 7

அரக்கன்நெரிதர இரக்கம் எய்தினீர்
பரக்கும் மிழலையீர் கரக்கை தவிர்மினே. 8

அயனும் மாலுமாய் முயலும் முடியினீர்
இயலும் மிழலையீர் பயனும் அருளுமே. 9

பறிகொள் தலையினார் அறிவதறிகிலார்
வெறிகொள் மிழலையீர் பிறிவதரியதே. 10

காழி மாநகர் வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல் தாழும் மொழிகளே. 11

------

31. பணம் பெற

"மிக அவசியமான காரியத்திற்கு (மிக்க ஆசையின்றி) தேவைக்கு பணம் கிடைக்க"

திருஞானசம்பந்தர் அருளியது. ஞானசம்பந்தர் சீர்காழியில் ஞானப்பால் உண்டு. திருக்கோலக்காவில் பஞ்சாக்கரம் வரையப்பட்ட பொற்றாளத்தைப் பெற்று பல தலயாத்திரைகள் செய்து. பல அற்புதங்க்ளை நிகழ்த்தி திருவாவடுதுறை வருகிறார். அவ்வமயம் அவர் தந்தையார் சிவபாத இருதயர் யாகம் செய்யக் காலம் வந்தபடியால், யாகத்துக்குப் பொருள் வேண்டுகிறார். திருஞானசம்பந்தர் உடனே "இடரினும் தளரினும்" என்ற திருப்பதிகத்தைப் பாடி வேண்ட, சிவபெருமான் பூதகணம்மூலம் ஆயிரம் பொற் காசுகள் கொண்ட ஒரு உலவாக்கிழியை, பலிபீடத்தில் வைத்தருள, ஞானசம்பந்தர் அதனைப் பெற்று தந்தையாரிடம் கொடுக்க, சிவபாத இருதயர் அதைக்கொண்டு யாகத்தை இனிதே நடத்தினார். இதை பெரிய புராணத்தில், தெய்வச் சேக்கிழார்,

"நச்சிஇன் தமிழ் பாடிய ஞானசம்பந்தர்
இச்சையே புரிந்தருளிய இறைவர் இன்னருளால்
அச்சிறப்பரும் பூதம்முன் விரைந்து அக்கல் பீடந்து
உச்சி வைத்தது பசும்பொன் ஆயிரக்கிழி ஒன்று"

என்று அழகாக அருளியிருக்கிறார்.

திருவாவடுதுறை பண் : காந்தாரபஞ்சமம்
திருஞானசம்பந்தர் அருளியது (கேதாரகௌளை)

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்தநஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமை யாளுமா
றீவதென்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
ளாவடுதுறை யரனே. 1

வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனலேன்
தாழிளந் தடம்புனல் தயங்குசென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோவெமை யாளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னரு
ளாவடுதுறை யரனே. 2

நனவினுங் கனவினும் நம்பாவுன்னை
மனவினும் வழிபடல், மறவேனம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனலெரி யனல்புல்க கையவனே
இதுவோவெமை யாளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
ளாவடுதுறையரனே. 3

தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மல ரடியலா லரற்றாதென்நா
கைமல்கு வரிசிலைக் கணையொன்றினால்
மும்மதி லெரியெழ முனிந்தவனே
இதுவோவெமை யாளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
ளாவடுதுறை யரனே. 4

கையது வீழினுங் கழிவுறினும்
செய்கழ லடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே.
இதுவோவெமை யாளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
ளாவடுதுறை யரனே. 5

வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாயுன் னடியலா லேத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோவெமை யாளுமா
றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
ளாவடுதுறை யரனே. 6

வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் னடியலா லரற்றாதென்நா
ஒப்புடை யொருவனை யுருவழிய
அப்படி யழலெழ விழித்தவனே

இதுவோவெமை யாளுமா
 றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
 ளாவடுதுறை யரனே. 7

பேரிடர் பெருகியோர் பிணிவரினுஞ்
 சீருடைக் கழலலாற் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி யிராவணனை
 ஆரிடர் படவரை யடர்த்தவனே
இதுவோவெமை யாளுமா
 றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
 ளாவடுதுறை யரனே. 8

உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின்
 ஒண்மல ரடியலா லுரையாதென்நா
கண்ணனுங் கடிகமழ் தாமரைமேல்
 அண்ணலு மளப்பரி தாயவனே
இதுவோவெமை யாளுமா
 றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
 ளாவடுதுறை யரனே 9

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
 அத்தாவுன் னடியலா லரற்றாதென்நா
புத்தருஞ் சமணரும் புறனுரைக்கப்
 பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோவெமை யாளுமா
 றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின்னரு
 ளாவடுதுறை யரனே. 10

அலைபுன லாவடு துறையமர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய்
விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன் னேறுவர்
நிலமிசை நிலையிலரே. 11

32. பொன், பணம் பெற

சுந்தரர் அருளியது. இறைவனாலேயே "பித்தா" என்று அடியெடுத்துக் கொடுக்கப்பட்டுப் பாடியவர். அவர் பல திருத்தலங்களையும் வழிபட்டு பற்பல அற்புதங்களையும் நிகழ்த்தி, கச்சூர் ஆலக்கோயில், திருஏகம்பம், திருக்கச்சி மேற்றளி முதலிய பல தலங்களைத் தரிசித்து, வழிபட்டு, "திருஓணகாந்தன்தளி" என்ற திருத்தலத்தை அடைகிறார். அங்கு இறைவனை தோழமை உரிமையோடு வேண்டி "நெய்யும் பாலும்" என்ற இத் திருப்பதிகத்தைப் பாடி பொன் பெற்றார்.

7–ஆம் திருமுறை

திருவோணகாந்தன்தளி — ராகம் : நாதநாமகிரியை
சுந்தரர் அருளியது — பண் : இந்தளம்

திருச்சிற்றம்பலம்

நெய்யும் பாலும் தயிருங் கொண்டு
நித்தல் பூசனை செய்ய லுற்றார்
கையி லொன்றுங் காணமில்லைக்
கழலடி தொழுதுய்யி னல்லால்

ஐவர் கொண்டிங்கு ஆட்டவாடி
ஆழ் குழிப்பட்டழுந்து வேனுக்கு
உய்யுமா றொன்றருளிச் செய்யீர்
ஓணகாந்தன் தளியுளீரே. 1

திங்கள் தங்கு சடையின் மேலோர்
திரைகள் வந்து புரளவீசும்
கங்கை யாளேல் வாய்திறவாள்
கணபதியேல் வயிறுதாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை
தேவியார் கோற்றட்டி யாளார்
உங்களுக்காட் செய்யமாட்டோம்
ஓணகாந்தன் தளியுளீரே. 2

பெற்ற போழ்தும் பெறாத போழ்தும்
பேணி உம்கழல் ஏத்துவார்கள்
மற்றோர் பற்றிலர் என்றிரங்கி
மதியுடையவர் செய்கை செய்யீர்

அற்ற பேழ்தும் அலந்த போழ்தும்
ஆபற்காலத் தடிகேள் உம்மை
ஒற்றி வைத்திங் குண்ணலாமோ
ஓணகாந்தன் தளியுளீரே. 3

வல்லதெல்லாம் சொல்லி உம்மை
வாழ்த்தினாலும் வாய்திறந் தொன்
றில்லை என்னீர் உண்டும் என்னீர்
எம்மை ஆள்வான் இருப்பதென்நீர்
பல்லை உக்க படு தலையிற்
பகலெல்லாம் போய்ப் பலிதிரிந்திங்

தொல்லை வாழ்க்கை ஒழிய மாட்டீர்
ஓணாகாந்தன் தளியுளீரே. 4

கூடிக் கூடித் தொண்டர் தங்கள்
கொண்ட பாணிகுறை படாமே
ஆடிப்பாடி அழுது நெக்கங்
கன்புடையவர்க் கின்பம் ஓரீர்
தேடித் தேடித் திரிந்தெய்த்தாலும்
சித்தம் என்பால் வைக்கமாட்டீர்
ஓடிப் போகீர் பற்றுந் தாரீர்
ஓணகாந்தன் தளியுளீரே. 5

வாரிருங்குழல் வாள் நெடுங்கண்
மலைமகள் மதுவிம்மு கொன்றைத்
தாரிருந்தட மார்பு நீங்காத்
தையலாள் உலகுய்ய வைத்த
காரிரும் பொழிற் கச்சிமூதூர்க்
காமக் கோட்டம் உண்டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வ தென்னே
ஓணகாந்தன் தளியுளீரே. 6

பொய்ம்மையாலே போது போக்கிப்
புறத்தும் இல்லை அகத்தும் இல்லை
மெய்ம்மை சொல்லி ஆளமாட்டீர்
மேலைநாள் ஒன்றிடவுங் கில்லீர்
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்
ஏதும் தாரீர் ஏதும் ஓதீர்
உம்மையன்றே எம்பெருமான்
ஓணகாந்தன் தளியுளீரே. 7

வலையம் வைத்த கூற்ற மீவான்
    வந்து நின்ற வார்த்தை கேட்டுச்
சிலை அமைத்த சிந்தையாலே
    திருவடி தொழுதுய்யின் அல்லால்
கலை அமைத்த காமச் செற்றக்
    குரோத லோப மதவருடை
உலை அமைத்திங் கொன்ற மாட்டேன்
    ஓணகாந்தன் தளியுளீரே. 8

வாரமாகித் திருவடிக்குப்
    பணி செய் தொண்டர் பெறுவதென்னே
ஆரம்பாம்பு வாழ்வ தாரூர்
    ஒற்றி யூரேல் உம்ம தன்று
தார மாகக் கங்கை யாளைச்
    சடையில் வைத்த அடிகேள் உந்தம்
ஊரும் காடு உடையும் தோலே
    ஓணகாந்தன் தளியுளீரே. 9

ஓவணம் மேல் எருதொன் றேறும்
    ஓணகாந்தன் தளியுளார்தாம்
ஆவணஞ் செய் தாளுங் கொண்டு
    அரைதுகிலொடு பட்டு வீக்கிக்
கோவணமேல் கொண்ட வேடம்
    கோவையாக ஆரூரன் சொன்ன
பாவணத்தமிழ் பத்தும் வல்லார்
    பறையுந் தாஞ்செய்த பாவந்தானே. 10

33. பொன், பணம் பெற

"நன்பி" திருப்பதிகம் சுந்தரர் அருளியது. அவர் பல தலங்களைத் தரிசித்து வழிபட்டு, திருமுதுகுன்றம் வந்து, இப்பதிகத்தை இறைவன்முன் பாடி பன்னீராயிரம் பொன் பெற்றார்.

7–ம் திருமுறை

திருமுதுகுன்றம் — பண்–தக்கேசி
சுந்தரர் அருளியது — ராகம் : காம்போதி

திருச்சிற்றம்பலம்

மெய்யை முற்றப் பொடிப்பூசியொர் நம்பி
வேதம் நான்கும் விரித்தோதியொர் நம்பி
கையிலோர் வெண்மழு ஏந்தியொர் நம்பி
கண்ணும் மூன்றுமுடையாய் ஒரு நம்பி
செய்ய நம்பி சிறுச் செஞ்சடை நம்பி
திரிபுரம் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 1

திங்கள் நம்பி முடிமேல் அடியார்பால்
சிறந்த நம்பி பிறந்த உயிர்க்கெல்லாம்
அங்கண் நம்பி அருள்மால் விசும்பாளும்
அமர நம்பி குமரன்முதல் தேவர்

தங்கள் நம்பி தவத்துக்கு ஒரு நம்பி
தாதை என்றுன் சரண்பணிந்தேத்தும்
எங்கள் நம்பி எனை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 2

வருந்த அன்று மதயானை உரித்த
வழக்கு நம்பி முழக்கும் கடல்நஞ்சம்
அருந்தும் நம்பி அமரர்க்கு அமுதுஈந்த
அருளென் நம்பி பொருளால் வருநட்டம்
புரிந்த நம்பி புரிநூலுடை நம்பி
பொழுதும் விண்ணும் முழுவதும் பலவாகி
இருந்த நம்பி என்னை ஆளுடைநம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 3

ஊறு நம்பி அமுதா உயிர்க்கெல்லாம்
உரிய நம்பி தெரியம்மறை அங்கம்
கூறும் நம்பி முனிவர்க்கு அருங்கூற்றைக்
குமைத்த நம்பி குமையாப் புலன்ஐந்தும்
சீறு நம்பி திருவெள்ளடை நம்பி
செங்கண் வெள்ளைச் செழுங்கோட்டு எருது என்றும்
ஏறு நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 4

குற்ற நம்பி குறுகார் எயில்மூன்றைக்
குலைத்த நம்பி சிலையா வரைகையில்
பற்றும் நம்பி பரமானந்த வெள்ளம்
பணிக்கும் நம்பி எனப்பாடுதல் அல்லால்
மற்று நம்பி உணக்கு என்செயவல்லேன்
மதியிலேன் படும் வெந்துயர் எல்லாம்
ஏற்று நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 5

அரித்த நம்பி அடிகை தொழுவார்நோய்
ஆண்ட நம்பி முன்னை ஈண்டுலகங்கள்
தெரித்த நம்பி ஒரு சேவுடை நம்பி
சில்பலிக்கு என்று அகந்தோறும் மெய்வேடம்

தரித்த நம்பி சமயங்களின் நம்பி
தக்கன்தன் வேள்விபுக்கு அன்று இமையோரை
இரித்த நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 6

பின்னை நம்பும் புயத்தான் நெடுமாலும்
பிரமனும் என்றிவர் நாடியும் காணா
உன்னை நம்பி ஒருவர்க்கு எய்தலாமே
உலகு நம்பி உரைசெய்யுமது அல்லால்
முன்னை நம்பி பின்னும் வார்சடை நம்பி
முழுதிவை இத்தனையும் தொகுத் தாண்டது
என்னை நம்பி எம்பிரானாய நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 7

சொல்லை நம்பி பொருளாய்நின்ற நம்பி
தோற்றம் ஈறும் முதலாகிய நம்பி
வல்லை நம்பி அடியார்க்கு அருள்செய்ய
வருந்தி நம்பி உனக்கு ஆட்செய்கில்லார்
அல்லல் நம்பி படுகின்றது என்நாடி
அணங்கொருபாகம் வைத்து என்கணம் போற்ற
இல்லம் நம்பி இடுபிச்சை கொள்நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 8

காண்டு நம்பி கழற்சேவடி என்றும்
கலந்து உனைக் காதலித்து ஆற்செய்கிற்பாரை
ஆண்டு நம்பி அவர்முன்கதி சேர
அருளும் நம்பி குருமாப்பிறை பாம்பைத்

தீண்டும் நம்பி சென்னியில் கன்னிதங்கத்
திருத்தும் நம்பி பொய்ச்சமண் பொருளாகி
ஈண்டும் நம்பி இமையோர் தொழும்நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே 9

கரத்தி நம்த கசியாதவர் தம்மைக்
கசிந்தவர்க்கு இம்மையோடு அம்மையில் இன்பம்
பெருக்கும் நம்பி பெருகக் கருத்தா. 10

34. பிறவி பயன் பெற

"எடுத்த பிறவியின் பயன்பெற்று
நற்கதியடைய"

திரு அங்கமாலை எனப்படும் இப்பதிகத்தை திருநாவுக்கரசர் அருளினார்.

4ஆம் திருமுறை

பொது — பண்: சாதாரி
திருநாவுக்கரசு அருளியது — ராகம்: பந்துவராளி

திருச்சிற்றம்பலம்

தலையே நீ வணங்காய்-
தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய். 1

கண்காள் காண்மின்களோ-
கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசிநின் றாடும்பிரான்றன்னைக்
கண்காள் காண்மின்களோ. 2

செவிகாள் கேண்மின்களோ-
சிவன் எம்மிறை செம்பவள
எரிபோல் மேனிப்பி ரான்திற
மெப்போதுஞ் செவிகாள் கேண்மின்களோ. 3

மூக்கே நீ முரலாய்-
முது காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை
மணாளனை மூக்கே நீ முரலாய். 4

வாயே வாழ்த்துகண்டாய்-
மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பி ரான்தன்னை
வாயே வாழ்த்துகண்டாய். 5

நெஞ்சே நீ நினையாய்-
நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய். 6

கைகாள் கூப்பித்தொழீர்-
கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித்தொழீர். 7

ஆக்கை யாற்பயனென்-
அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யால்அட்டிப் போற்றி என்னாதஇவ்
ஆக்கை யாற்பயனென். 8

கால்க ளாற்பயனென்-

கறைக் கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்
கால்க ளாற்பயனென். 9

உற்றார் ஆருளரோ-
உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தனல் லால்நமக்
குற்றார் ஆருளரோ. 10

இறுமாந்திருப்பன் கொலோ-
ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக் கீழ்ச்சென்றங்
கிறுமாந் திருப்பன்கொலோ. 11

தேடிக் கண்டுகொண்டேன்-
திரு மாலோடு நான்முகனுந்
தேடித் தேடொணாத் தேவனை
என்னுள்ளே தேடிக் கண்டுக்கொண்டேன். 12

திருச்சிற்றம்பலம்


முடிவுரை


இந்த புத்தகத்தில் தந்துள்ள **34** திருப் பதிகங்களையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, அவரவருக்கு வேண்டியபடி பக்திச் சிரத்தையுடனும், விடா முயற்சியுடனும் கடவுள் நம்பிக்கையுடனும், ஊக்கமுடனும் முன் தரப்பட்டுள்ள "பாராயணம் செய்யும் முறை" என்பதைப் பின்பற்றி, ஓதி வந்தோமானால் பூரண பலன்கள் நிச்சயம் கிடைக்கும் சந்தேகமில்லை.

சுபம்

ஓம் நமசிவாய

டாக்டர். வெ.தெ. மாணிக்கம், *எம்.ஏ.பிஎச்.டி.*


தெய்வத் திருநெறித் தமிழ்வேத 12 திருமுறைகளருளிச்செய்த மூர்த்திகள்.


திருஞானசம்பந்தர்
திருநாவுக்கரசர்
சுந்தரமூர்த்தி
மாணிக்கவாசகர்